


# The Trumpet of the Seventh Angel
# ஏழாம் தூதனின் எக்காளம்

1879 - 1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்
மலர் – 9, இதழ் – 1, ஜனவரி – பிப்ரவரி 2023




**R5315**

## GOOD MAN'S SIN
## நல்ல மனிதனின் பாவம்

எண்ணாகமம் 20:1-13
"என் கன்மலையும் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமூகத்தில் பிரீதியாயிருப்பதாக."– சங்கீதம் 19:14

இஸ்ரயேலர்கள் எகிப்தை விட்டு வெளியேறிய நாற்பதாவது வருடமே அவர்கள் கானானுக்குள் நுழைய தேவன் குறித்திருந்த காலமாக இருந்தது. மோசேக்கு வயது நூற்றி இருபதாக இருந்தது. ஆனால் அவர் நல்ல பலமுள்ளவராக இருந்தார். அவரது சகோதரி மிரியாம் முன்னரே இறந்துபோனாள். அவரது மூத்த சகோதரன் ஆரோன் இன்னும் உயிரோடிருந்து அதே வருடத்தில் இறந்து போனான். இஸ்ரயேலின் பிள்ளைகள் வனாந்தரத்தில் முப்பத்தி எட்டு வருடங்கள் தங்கியிருந்தார்கள். காதேஸ் பர்னேயாவை மையமாகக் கொண்டு பெரும்பாலான காலப்பகுதியை தங்கள் ஆடு, மாடுகளுடன் வனாந்தரத்திலே கழித்தார்கள்.

நாற்பதாவது வருடம் ஏப்ரல் மாதத்தில் மோசேயின் மூலமான தெய்வீக கட்டளையின்படி அவர்கள் காதேசில் கூடி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழைய தயாரானார்கள். ஆனால் தண்ணீர் பற்றாக்குறை இருந்தது. ஜனங்களும் அவர்களது கால்நடைகளும் தாகமாயிருந்தார்கள். முறுமுறுப்புகள் எழும்பின. அங்கே தாகத்தினால் சாகிறதைக் காட்டிலும் எகிப்திலேயே அல்லது வேறு எங்கயோ அழிந்து போயிருந்தால் நலமாயிருக்கும் என்ற பேச்சு எழுந்தது.

இந்த சுமை இயற்கையாகவே மோசே மற்றும் ஆரோன் மேல் விழுந்தது. கனம் மற்றும் செல்வாக்குள்ள சகல தலைவர்களும் இந்த கனமான பொறுப்புகளை சுமந்தார்கள். மோசேயும் ஆரோனும் இந்த காரியத்தை உன்னதமானவரிடம், அவரது வழிநடத்துதலுக்காக குறையாக இல்லாமல் வேண்டுகோளாக இஸ்ரயேலரின் உண்மையான தலைவரிடம் எடுத்துச் சென்றார்கள். அவர்கள் சென்றது வீணாகவில்லை. கர்த்தர் தம்மை கிருபையாக வெளிப்படுத்தினார். "கர்த்தருடைய மகிமை அவர்களுக்கு காணப்பட்டது." பார்த்துக்கொண்டிருந்த இஸ்ரயேல் ஜனங்களுக்கும் வெளிப்படுத்தினார். இந்த மகிமை ஒரு ஒளிக்கதிராக மகா பரிசுத்த ஸ்தலத்தின் கிருபாசனத்திலிருந்து வெளிப்பட்டதாக கருதப்பட்டது.

அவர்கள் கோலை, "ஆரோனின் துளிர்த்த கோலை" எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது. அது மகா பரிசுத்த ஸ்தலத்தில் கிருபாசன பெட்டியில் வைக்கப்பட்டிருந்தது. அந்த கோல், ஆரோன் பிரதான ஆசாரியனாகவும் மோசேக்கு உதவியாளனாகவும் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு ஒரு ஞாபகார்த்தமாக இருந்தது. அது அவர்களுக்கு தெய்வீக கிருபையின் ஒரு அடையாளமாக இருந்தது. அது கர்த்தரிடத்திலும், அவரது வல்லமையின் சத்துவத்திலும் நம்பிக்கை வைத்துள்ள அனைவருக்கும் அவர்களது தேசத்தை இதுவரை வழி நடத்தியது போல இன்னும் தொடர்ந்து வழி நடத்துகிறதாக இருந்தது.

### பாறையை அடித்தது ஒரு பாவம்

கர்த்தர், மோசேயிடம் கன்மலையை பார்த்து பேசச்சொன்னார். அந்த வார்த்தைக்கு, தண்ணீர் கன்மலையிலிருந்து ஏராளமாய் புறப்பட்டு வந்திருக்கும். கடந்த முறை சுமார் முப்பத்தி எட்டு வருடங்களுக்கு முன்பு, சீனாய் மலைக்கு அருகே இதே போன்ற அனுபவத்தில், மோசே கன்மலையை அடிக்கும்படி கட்டளையிடப்பட்டிருந்தார்; ஆனால் இந்த முறை கன்மலை அடிக்கப்படக் கூடாது. இங்கே மோசேயும் ஆரோனும் பாவம் செய்தார்கள். "பூமியிலே சகல "மனிதரிலும் சாந்த குணமுள்ள மனிதன்" தன்னை மறந்து, ஒரு கனத்தில் பெருமைக்கு ஒத்த ஆவியையும், தன்னிறைவும் கோபமும் தன்னைக் கட்டுப்படுத்தும்படி அனுமதித்தார். கன்மலையை அடித்து அவர் ஜனங்களை நோக்கி, "கலகக்காரரே, கேளுங்கள், உங்களுக்கு இந்த கன்மலையிலிருந்து, நாங்கள் தண்ணீர் புறப்படப் பண்ணுவோமா என்று கத்தினார்."

கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணியிருந்தது போல, தண்ணீர் வந்தது. ஜனங்கள் உண்மையிலேயே தேவையான ஆசீர்வாதத்தை பெற்றார்கள். ஆனால் மனிதரிலும் தேவனுடைய ஊழியரிலும் மிகவும் சிறப்பு வாய்ந்தவர் தெய்வீக மறுதலிப்பில் விழுந்தார். மோசேயோ, ஆரோனோ கானானுக்குள் நுழைய மாட்டார்கள் என்பதே கர்த்தரின் தீர்ப்பாக இருந்தது. எனினும் மோசே, ஜனங்களுடன் அவர்களது பிரயாண முடிவு வரை செல்லவும், நெபோ மலையிலிருந்து யோர்தானின் குறுக்கே தேசத்தை பார்க்கவும் அனுமதிக்கப்பட்டார்.

இந்த ஆக்கினைத் தீர்ப்பு, நித்திய ஆக்கினையில் போடுவதையோ, நீண்ட கால அவமதிப்பையோ குறிக்காது. தேவனுடைய பரிசுத்தவான்களைப்போல, மரணத்துக்கு முன்பே மோசே அவ்வப்போது அவரது முழு தண்டனையை பெற்றார். தற்கால வாழ்க்கையில் செய்த தவறுகளுக்காக மனுக்குலத்திற்கு பொதுவாக

கிடைக்கப்போகிற அடிகள், தண்டனைகள் இருந்தாலும் பரிசுத்தவான்களுக்கு அப்படி ஏதும் இல்லை. அவர்கள் உலகத்திற்கு சீக்கிரத்தில் வரப்போகிற ஆக்கினைத் தீர்ப்புக்கு வராதபடி தற்கால வாழ்க்கையிலேயே அவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள் என்று அப்போஸ்தலர் விளக்குகிறார்.

## அவர்கள் கிறிஸ்து என்னும் கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்

கன்மலையை அடிப்பது ஒரு நிழலான காரியம் என்றும் பரிசுத்த பவுல் நமக்கு குறிப்பிட்டு கூறுகிறார். வானத்திலிருந்து வந்த அப்பம், மன்னா, இயேசுவை குறித்தது போல, கன்மலையை அடித்தது கூட இயேசுவைக் குறித்தது. கன்மலையிலிருந்து வந்த புத்துணர்ச்சி தரும் தண்ணீர் கிறிஸ்துவின் பலியினால் வருகிற ஆசீர்வாதங்களை குறிக்கிறது. இஸ்ரயேலர்களின் அனுபவத்தில் முதல் தடவை கன்மலையை அடித்தது தேவனால் அங்கீகரிக்கப்பட்டதாக இருந்தது. துன்பத்தின் கோல் அவரது மரணம் வரை இயேசுவின் மேல் விழுவது அவசியமானதாக இருந்தது:

1. "கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் (மரண தண்டனையை) விழப்பண்ணினார்."

2. "அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம்." – ஏசாயா 53:5,6

பரிசுத்த பவுலின் வார்த்தைகளாவன: "எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில் அவர்களோடேகூடச் சென்ற ஞான கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள். அந்த கன்மலை கிறிஸ்துவே." – 1 கொரிந்தியர் 10:4

தேவன் அங்கீகரிக்காத, இரண்டாவது தடவை கன்மலை அடிக்கப்பட்டது எதை நிழலாக காண்பிக்கிறது என்பது குறித்து பரிசுத்த பவுல் விளக்கவில்லை. இந்த இரண்டாவது அடித்தல் தண்டிக்கப்பட்டதால், அது தவறு என்பதை நமக்கு கூறுகிறது. அது தேவனுடைய ஜனங்களின் சில தவறான மார்க்கத்தை அர்த்தப்படுத்துகிறது. இரண்டு யோசனைகள் நமக்கு வருகிறது. அதில் ஒன்றோ அல்லது இரண்டும் பொருந்தக்கூடியதாக இருக்கின்றது.

1. நாற்பது வருட முடிவில், ஜனங்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் வழிநடத்தப்படும் போது, இந்த இரண்டாவது அடித்தல், தேவனுடைய ஜனங்களை, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை அடித்தலை குறிக்கலாம். கிறிஸ்துவின் சரீர அங்கங்களாகிய சில பரிசுத்தவான்கள் இந்த யுக முடிவில் அவமானத்திற்கும் ஒருவேளை மரணத்திற்கும் ஒப்புக்கொடுக்கப்பட்டு, ஆண்டவர் அடிக்கப்பட்ட போது, அவர் செய்தது போல செய்து இப்படியாக மகிமைக்குள் நுழைவார்கள் என்று சுவிசேஷ யுகத்தைப் பற்றிய அநேக வேதவாக்கியங்கள் நமக்கு கூறுகின்றன. ஆண்டவர் விஷயத்தில், ஜனங்களெல்லாரும் கெட்டுப்போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்கும் என்று பிரதான ஆசாரியன் அறிவித்தான். (யோவான் 11:50)

மத ஆளுனர்கள் தேவனுக்கு மகிமை என்று நினைத்து ஆண்டவருக்கு விரோதமாக சதி செய்தார்கள். இந்த சுவிசேஷ யுக முடிவில் இதே மாதிரியான யோசனைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மதத்தலைவர்கள் சுய பாதுகாப்பில் இதே போன்ற நோக்கங்களில் கர்த்தருடைய பிள்ளைகள் சிலருக்கு எதிராக சதி செய்து, அடிக்கவும் காயப்படுத்தவும் செய்வார்கள். இது ஒரு சரியான விளக்கமாக இருக்குமானால், அடிக்கிறதற்கு பதிலாக, தண்ணீருக்காக, சத்தியத்திற்காக, புத்துணர்ச்சிக்காக கன்மலையிடம் பேசுகிற நல்ல மார்க்கத்தை பின்பற்றுவதின் மூலம் பெரிய ஆசீர்வாதங்கள் வராது என்பதையும் தவறான மார்க்கத்திலிருந்து தேவ கிருபையின் கீழ் ஆசீர்வாதங்கள் பாய்ந்தோடும் என்பதை குறிக்கும்.

2. இரண்டாவது கருத்து, கன்மலையை இரண்டாவது தடவை அடிப்பது, அர்ப்பணம் செய்த அவரது சீஷர்கள் இரட்சகரை மறுதலித்து, அவரை அவமானப்படுத்தும் –படியாக மறுபடியும் சிலுவையில் அறைவதை குறிக்கும். ஒரு தரம் பிரகாசிப்பிக்கப்பட்டும் பரம ஈவை ருசிபார்த்தும் இனிவரும் உலகத்தின் பெலன்களை ருசிபார்த்தும், கிறிஸ்துவின் வார்த்தையை மறுதலிப்பவர்கள் பரலோக இராஜ்யத்திலுள்ள எந்த இடத்திற்கும் அபாத்திரர் என்று கருதப்பட்டு இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள் என்று பரிசுத்த பவுல் விளக்குகிறார். (எபிரேயர் 6:4-7)

மோசே மற்றும் ஆரோன் இருவரும் இந்த மாதிரியில் பங்குபெற்று, கானான் தேசத்தில் நுழையாதது, ராஜரீக ஆசாரிய பிரகாசிப்பிக்கப்பட்ட அங்கங்களும், மிகவும் உயர்ந்த உத்தியோகஸ்தர்களும் இரண்டாவது மற்றும் அங்கீகரிக்கப்படாத கன்மலையை அடித்தலினால் சித்தரித்துக் காண்பிக்கப்பட்ட பாவத்தை செய்யும் ஆபத்தில் இருக்கிறார்கள் என்பதை குறிக்கிறது. மாறாக, முதல் தடவையாக மெய்யான கன்மலையை அடித்தவர்கள், இயேசுவை சிலுவையில் அறைந்தவர்கள், அறியாமல் செய்தார்கள் என்றும் வேதவாக்கியங்கள் நமக்கு உறுதியளிக்கின்றன. "சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்கள்." "அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே." (அப்போஸ்தலர் 3:17; 1 கொரிந்தியர் 2:8)

## ஆவிக்குரிய தலைவருக்கான பாடங்கள்

"பூமியிலுள்ள சகல மனிதரிலும் சாந்தகுண –முள்ளவனாயிருந்தவன்." அநேக வருடங்கள் பயிற்சியும் அனுபவமும் உள்ளவர் இப்படிப்பட்ட ஒரு தவறைச் செய்தார். இந்த பாடம் ஆவிக்குரிய தலைவர்களுக்கு மனதில் நன்கு பதியக்கூடிய ஒன்றாக இருக்கும். பரிசுத்த ஆவியினால் வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைகள் நமக்கு கூறுவதாவது: "தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக் –கடவன்." ( 1 கொரிந்தியர் 10:12) மோசே மற்றும் ஆரோனின் பாவம் அவிசுவாசத்தில் ஒன்று என்று கர்த்தர் கூறினார். "இஸ்ரயேலரின் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம் பண்ணும்படி நீங்கள் என்னை விசுவாசியாமற்போனபடியினால்" என்று கர்த்தர் கூறினார். (எண்ணாகமம் 20:12)

மோசே கன்மலையை அடிப்பதற்கு தேவனிடத்தில் விசுவாசம் தேவைப்பட்டது. அவரது விசுவாசக் குறைவு ஜனங்களிடத்தில் இருந்தது. அவர் ஒரு தெளிவான விளைவை ஏற்படுத்த விரும்பினார். ஒரு நிரந்தரமான பாடத்தை அவர்களில் பதியவைக்க விரும்பினார்.

“கலகக்காரரே, கேளுங்கள், உங்களுக்கு இந்த கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப் பண்ணுவோமா?”அதன் விளைவு தெளிவானதாக இருந்தது. ஜனங்கள் மோசேயுடன் பணிவுடன் கூடிய அச்சத்தில் நின்றிருக்கலாம். ஆனால் காரியத்தை கையாளுவதற்கு இது சிறந்த வழியல்ல. ஏனெனில் அது தேவனுடைய வழியல்ல. யேகோவாவின் நாமத்தில் கன்மலையிடமிருந்து கேட்பதற்கு மோசே தன்னை மறைத்திருந்தால், தன்னை தாழ்த்தியிருந்ததால் நன்றாக இருந்திருக்கும்.

கிறிஸ்துவின் சபையின் தலைவர்கள் வகுப்பார், மூப்பர்கள், ஊழியர்கள் தேவன் ஏற்பாடு செய்திருக்கிற ஆசீர்வாதங்கள், அடிக்கப்பட்ட இயேசுவிடமிருந்து பாயும் என்பதையும் நன்றாக நினைவுகூருவார்கள். அவர்கள் கன்மலையை அடிக்கவோ அல்லது கிருபை மற்றும் சத்தியத்தின் வெள்ளத்தை வழங்குவதற்கு தேவனுடைய ஜனங்களுக்கு முன்பாக வியக்கத்தக்க வகையில் பாவனை செய்யவோ அனுமதிக்கப்படவில்லை என்பதையும் நினைவுகூருவார்கள்.

இன்னொரு வகையில் தற்காலத்தில் வரவேண்டிய கிருபை மற்றும் சத்தியத்தில் தாகமாயிருக்கிற ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள், கர்த்தரின் ஜனங்கள், போதிக்கிற வேலையை எடுத்துக் கொண்டிருப்பவர்களிடம் தயவு காண்பிக்க வேண்டும். கர்த்தருடைய ஊழியர்களை நேர்மை மற்றும் விசுவாசத்தில் தீவிரமாக சோதிப்பதற்கு இந்த காலத்தைக் காட்டிலும் வேறுகாலம் இருந்ததில்லை. அனைவருக்கும் சாந்தம், பொறுமை, நீடிய பொறுமை, சகோதர அன்பு, அன்பு, தேவனிடத்தில் விசுவாசம் மற்றும் அவர்களது உடன்படிக்கைக்கு உண்மைத்தன்மை ஆகியவை தேவையாயிருக்கிறது.

## ஏதோமியர், மோவாபியர், மீதியானியர்

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் வசித்த பல்வேறு ஜாதிகளின் அக்கிரமம் நிறைவடைந்திருந்து, இஸ்ரயேலர்களால் அகற்றப்பட வேண்டியவர்களாக இருந்தார்கள். இவர்கள் ஆபிரகாமுக்கு உறவினர்கள் அல்ல. ஆனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் தெற்கு மற்றும் கிழக்கில் குடியிருந்த ஏதோமியர்கள், மோவாபியர்கள் மற்றும் மீதியானியர்கள், இஸ்ரயேலருடன் இரத்த சம்பந்தமான உறவுக்காரர்கள். மீதியானியர்கள், சேத்தூராளின் மூலம் பிறந்த ஆபிரகாமின் பிள்ளைகள். மோவாபியர்கள் ஆபிரகாமின் சகோதரன் மகன் லோத்தின் பிள்ளைகள். ஏதோமியர்கள், யாக்கோபின் சகோதரன் ஏசாவின் சந்ததியினர். இஸ்ரயேலர்கள் தாக்குதல் செய்யும் போது உறவின் ஜனங்கள் தொல்லைப்படுத்தப்படாமலிருப்பது தெய்வீக திட்டமாக இருந்தது.

காதேஸிலிருந்து கானானுக்குள் நுழையும்நேரம் வந்த போது, ஏதோம் வழியாக செல்வதுதான் அருகில் உள்ள பாதையாக இருந்திருக்கும். இஸ்ரயேலர்கள் ஏதோம் வழியாக செல்ல அனுமதி கேட்டார்கள். அவர்களது ஜனங்களுக்கோ, உடைமைகளுக்கோ எந்த நஷ்டமும் ஏற்படாது, அப்படி ஏற்பட்டால் நஷ்ட ஈடு கொடுப்போம் என்று உத்தரவாதம் கொடுத்தார்கள். ஆனால் ஏதோமியர் அனுமதி கொடுக்கவில்லை. ஆகையால் ஏசாவுக்கும் யாக்கோபுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கைக்கு இசைவாக, இஸ்ரயேலின் சேனைகள் தெற்கே செல்ல தடுக்கப்பட்டு லோத்தின் பிள்ளைகளின் தேசமாகிய மோவாப் தேசத்தின் வழியாக சென்றார்கள்.

பாலைவனம் வழியாக செல்லும் இந்த மாற்றுப்பாதை மாபெரும் கூட்டத்திற்கு மனச்சோர்வாக இருந்தது. “வழியினிமித்தம் ஜனங்கள் மனமடிவடைந்தார்கள்.” மறுபடியும் ஜனங்களிடமிருந்து அவர்களுக்கு உண்மையிலேயே தேவனிடம் பிரதிநிதியாக இருந்த மோசேக்கு முறுமுறுப்பு வந்தது. அவர்களது முறுமுறுப்பு சரியானபடி தண்டனைக்குள்ளானது. அருகிலேயே இருந்த சர்ப்பங்களிடமிருந்து அவர்கள் காக்கப்படவில்லை. விளைவு பயங்கரமானதாக இருந்தது. மோசே பித்தளையினால் ஒரு சர்ப்பத்தை செய்து அதை ஒரு மரத்தில் தூக்கி நிறுத்தும் வரை சர்ப்பங்களினால் அநேகர் மரித்தார்கள். பித்தளை சர்ப்பத்தை நோக்கி பார்த்து விசுவாசத்தை அப்பியாசப்படுத்தி வியாதியிலிருந்து சுகமடையும்படி பாளையமெங்கும் செய்தி அனுப்பப்பட்டது.

## பாவத்தினால் கடிபட்டவர்கள் இரட்சகரை நோக்க வேண்டும்

இப்படியாக மாம்சீக இஸ்ரயேலர்கள் மாத்திரம் தண்டிக்கப்பட்டு, சரிபடுத்தப்படவில்லை. ஆனால் ஆவிக்குரிய இஸ்ரயேலரின் அனுகூலத்திற்கும் ஒரு நிரந்தர பாடமாக இருக்கும்படி எழுதப்பட்டிருந்தது. பாவமாகிய கொடிய சர்ப்பத்தினால் நமது இனம் கடிக்கப்பட்டிருக்கிறது. அதனிமித்தம் நாம் சாகிறோம். சிலுவையிலறையப்பட்டவரில் விசுவாசத்தை அப்பியாசப்படுத்தினால் மட்டுமே நாம் குணமடைய முடியும். பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையில் பாவத்தினால் கடிபட்டவர்களை இரட்சகரை நோக்கி பார்க்கச் சொல்வதே நம்முடைய ஊழியமாக இருக்கிறது. “சர்ப்பமானது மோசேயினால் வனாந்திரத்திலே உயர்த்தப்பட்டது போல, மனுஷகுமாரனும் உயர்த்தப்பட வேண்டும்.” “நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்” என்று இயேசு கூறினார். (யோவான் 3:14;12:32)

தற்காலத்தில் சிலர் மட்டுமே இந்த செய்தியை கேட்கிறார்கள் அல்லது சிலுவையிலறையப்பட்டவரை விசுவாசக் கண்களால் பார்க்கிறார்கள். திரளானவர்கள் புறஜாதிகளின் இருளில் மரித்துக்கொண்டிருக்கிறார்கள். சிலர் மட்டுமே கிறிஸ்துவில் விசுவாசத்தை அப்பியாசப்படுத்தும் சந்தர்ப்பத்தை பெற்றிருக்கிறார்கள். தேவனுக்கு ஸ்தோத்திரம். கல்வாரியில் உயர்த்தப்பட்டு அதன் பிறகு உயிர்த்தெழுதல் வல்லமையிலிருந்து உயர்த்தப்பட்டவர் வல்லமையிலும் மகா மகிமையிலும் வெளிப்படுத்தப்படும் நாள் நெருங்குகிறது. “உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.” அதற்குத்தக்கதாக அவர்கள் இயங்கவில்லை என்றால், தவறு அவர்களுடையதாகவே இருக்கும். (மத்தேயு 24:30; யோவான் 1:9-11) “உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல, பூமியிலேயும் செய்யப்படுவதாக” என்று நாம் இன்னும் ஜெபித்துக்கொண்டிருக்கிற மேசியாவின் ராஜ்யத்தின் மூலம் மகிமையின் நிலைமை வரும்.

**R5321**

## ACCEPTABLE AND UNACCEPTABLE WORSHIP

# பிரியமுள்ள மற்றும் பிரியமில்லாத ஆராதனை

''தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும்.'' - யோவான் 4:24

ஆராதனை என்பது முறைப்படியும் சரியான நோக்கத்துடன் தேவனுக்கு பிரியமாக இருக்கும்படி பரிசுத்தமானவர்களுக்கான வெளியரங்கமான பயபக்தியாகும். ஆராதனை செய்வதின் மனோபாவத்தை யூகிக்க முடியும். எனினும் தேவனுக்கு பிரியமில்லாமல் ஆராதனை செய்ய முடியும். நமது கர்த்தர் சமாரிய ஸ்திரீயிடம் பேசும் போது எப்படிப்பட்ட ஆராதனை தேவனுக்கு பிரியமானது என்று அறிவிக்கிறார். ஒருவர் குனிந்து ஆராதித்தும் தேவனுக்கு பிரியமில்லாதிருக்கக் கூடும். ஆவியோடும் உண்மையோடும் ஏறெடுக்கும் ஆராதனையே தேவனுக்கு பிரியமானது என்று கர்த்தர் இங்கே குறிப்பிடுகிறார்!

ஆவியோடு ஆராதிப்பதற்கும் உண்மையோடு ஆராதிப்பதற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை நமது கர்த்தர் குறிப்பிடுகிறார். நாம் சத்தியத்தை பெற்று கர்த்தரைப் பற்றி மிகவும் அறிந்திருப்போம்; ஆனால் நாம் ஆவியுடன் அவரிடம் போகவில்லையென்றால், அதாவது சரியான மனோபாவத்துடன் போகவில்லை என்றால், எவ்வளவு தான் நாம் அறிவை பெற்றிருந்தாலும் அது தேவனுக்கு பிரியமாயிருக்காது. அதாவது ஒருபுறஜாதி மனுஷன் மிகவும் ஆவியுடன் ஆராதனை செய்தாலும், அவன் சத்தியத்தை அறியவில்லை என்றால் தேவனுக்கு பிரியமான ஆராதனையை அவனால் செய்ய இயலாது. உதாரணத்திற்கு கொர்நெலியு, நூற்றுக்கதிபதியை எடுத்துக்கொள்ளுங்கள். அவன் அடிக்கடி ஜெபித்து வந்தான். ஏழைகளுக்கு தானம் தருமங்களை அதிகமாக கொடுத்து வந்தான். ஆனால் அவன் ஒரு புறஜாதியான். அவன் தேவனிடத்தில் நெருங்கக்கூடிய மனோபாவத்தை பெற்றிருந்தான். ஆனால் அந்த சமயத்தில் தேவன் அவனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏன் ஏற்றுக்கொள்ள வில்லை? ஏனெனில் அவன் சத்தியத்தை அறியவில்லை. புறஜாதியாருக்கான காலம் வரும்வரை அவனால் சத்தியத்தை அறிய முடியவில்லை. ஆனால் ஏற்ற காலம் வந்த போது, தேவனிடமிருந்து சத்தியத்தைப் பெற்ற முதல் புறஜாதியான் கொர்நெலியுதான். அதன் மூலம் அவன் ஆவியுடன் மாத்திரமல்ல சத்தியத்துடனும் ஆராதிக்கக் கூடியவனாக இருந்தான். அவனுடைய ஜெபங்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்கிற உறுதிமொழியை அவன் பெற்றான்.

கொர்நெலியுவுக்கு அனுப்பிய சத்தியம் மிக முக்கியமான ஒன்றாக இருக்கிறது. அதன்மூலம் நாம் அனைவரும் தேவனிடத்தில் நெருங்கி வரவும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். கொர்நெலியு ஒரு பாவியாக இருந்தால் கூட, தேவன், கிறிஸ்துவை ஒரு இரட்சகராக, பாவத்திற்கான ஒரு பரிசுத்தமாக்குதலுக்காக கொடுத்திருக்கிறார் என்கிற இந்த சத்தியம் அவனுக்கு அவசியமாயிருந்தது. இயேசுவின் ஒரு சீஷனாக ஆகி, அவரால் சொல்லப்பட்டபடி தேவனுடைய சித்தத்தை செய்ய நாடினால் தேவனுடைய ஏற்பாடுகளுக்கு இசைவாக அவனால் இருக்கக்கூடும் என்பதை அவன் அறிந்து கொண்டான். கொர்நெலியு அறியும்படி செய்யப்பட்ட மாபெரும் சத்தியது இது தான். அவன் பரிசுத்த ஆவியைப் பெற்று தேவனுடைய குடும்பத்திற்குள் வந்தான்.

இது இந்த காலத்திற்கும் ஏற்புடைய சத்தியமாக இருக்கிறது. ஆவியின்படி ஆராதிக்கிறவர்களாக இருந்தும், இயேசுவைப் பற்றிய சத்தியத்தை அறியாத ஜனங்கள் புறஜாதி தேசங்களில் இருக்கிறார்கள். தேவனை சரியானபடி ஆராதிக்கிறவனாவதற்கு முன்பு இந்த சத்தியம் அவனுக்கு அறியப்பட வேண்டும்.

நமது தலைப்பு வசனத்தில் சொல்லப்பட்ட சமாரிய ஸ்திரீக்கு கூட இந்த காரியம் உண்மையாக இருக்கிறது. சமாரியர்கள் புறஜாதி ஜனங்களாக இருந்தார்கள். அவர்கள் தேவனை சமாரியாவின் மலையில் கெர்சீம் மலையின்மேல் தொழுதுவந்தார்கள். அந்த தேவன் அவர்களுடைய தேவன் என்று நினைப்பதில் சந்தோஷப்பட்டார்கள். இயேசு விசாரித்த இந்த சமாரிய ஸ்திரீ கூறியதாவது: "நாங்கள் சமாரியா மலையில் தேவனை தொழுது கொள்ளுகிறோம். ஆனால் யூதராகிய நீங்கள் தேவனை எருசலேமில் இருக்கிற ஸ்தலத்திலே தொழுது கொள்ள வேண்டும் என்கிறீர்கள்."

இயேசு அவளிடம் விவரித்து கூறியதாவது: "நீங்கள் அறியாததை தொழுது கொள்ளுகிறீர்கள். நாங்கள் அறிந்திருக்கிறதை தொழுது கொள்ளுகிறோம். அதாவது யூதர்களாகிய எங்களுக்கு சத்தியம் அதிலே இருக்கிறது. யூதர்களாகிய நாங்கள், எங்கள் தேசத்தோடு ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் கீழ நாங்கள் தேவனை தொழுது கொள்ளுகிறோம். ஜெபத்தில் தேவனிடத்தில் வர நாங்கள் சலுகை பெற்றிருக்கிறோம். தேவன் எங்கள் ஜெபத்தைக் கேட்டு, பதிலளிப்பார். நாங்கள் தேவனுடைய வழிநடத்துதல்படி அவரை தொழுது கொள்ளுகிறோம்." சமாரியர் மதம்மாறிய யூதர்களாக மாறும் சாத்தியம் இருந்தது. ஆனால் அதன் அவசியத்தை அவர்கள் அறியாதிருந்தார்கள். ஆகையால் அவர்கள் வரவில்லை.

சுவிசேஷ யுகத்தில் நாம் கிறிஸ்து மூலம் அவருடைய உடன் சுதந்தரராகக்கூடிய சலுகையை பெற்றிருக்கிறோம். இப்படியாக சிலர் தேவனுடைய குடும்பத்திற்குள் வந்திருக்கிறார்கள். எனினும் நாம் இந்த சத்தியத்துக்குள் வந்தாலும் சரியான ஆவியுடன் இராவிட்டால் நமது ஜெபங்கள் நமது தலைக்கு மேல் போகாது. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாக தேவனுடன் அவரது பிள்ளைகளாக சரியான உறவுக்கு வருகிறவர்களே ஆவியுடனும் சத்தியத்துடனும் ஜெபிக்க முடியும். இவர்கள் மற்றும் இவர்கள் மட்டுமே மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலை பெறுவார்கள்.

R5317

LITERAL OR SYMBOLIC FIRE?

# சொல்லர்த்தமான அக்கினியா அல்லது அடையாளமான அக்கினியா?

"இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும், அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்து போகும் நாள் வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது."– 2 பேதுரு 3:7

இந்த தீர்க்கதரிசனமானது ஏதோ ஒரு வகையில் அல்லது ஏறக்குறைய சொல்லர்த்தமாக நிறைவேறுமா என்று நாம் கேட்கப்படுகிறோம். உதாரணமாக, மின்னலின் மின்சார வெளிப்பாட்டினால், புயல், அல்லது விஞ்ஞானிகள் இந்த பூமியை நெருங்கிக் கொண்டிருக்கிறதாக கூறுகிற மின்சார மண்டலம் மூலமாகவோ அழியுமா என்பதாகும். இந்த கருத்து உண்மை என்று ஏற்றுக்கொள்ளப்படுமானால், இது யாத்திராகமம் 9:23ல் சொல்லப்பட்டதற்கு இசைவாக இருக்கும். "கர்த்தர் இடி முழக்கங்களையும், கல் மழையையும் அனுப்பினார்; அக்கினி தரையின் மேல் வேகமாக ஓடிற்று; எகிப்து தேசத்தின் மேல் கர்த்தர் கல்மழையைப் பெய்யப்பண்ணினார்."

பரிசுத்த பேதுரு செப்பனியா, தீர்க்கதரிசி தாவீது மற்றும் பிறர் மூலமாக கர்த்தர் குறிப்பிடுகிற மகா அக்கினி ஒரு அடையாளமான அக்கினி என்று நாம் இன்னும் நினைக்கிறோம். மகா நாளின் அக்கினி அக்கிரமக்காரரை வேரையும் கொப்பையும் அழித்துப்போடும் என்று தீர்க்கதரிசிகள் அறிவிக்கிறார்கள். தேவனுடைய நீதி, கோபம் அக்கிரமக்காரர் ஒவ்வொருவரையும் அழித்துப் போடும் என்று குறிப்பதாக இது காணப்படுகிறது. மேலும் இந்த அக்கினி "அந்த நாள்" என்கிற ஆயிரம் வருட நாள் வரை, ஆயிரம் வருடம் யுகம் முழுவதும் செல்லும். அது அக்கிரமக்காரரின் வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும்.

### நீதியான கொள்கைகளுக்கு மானிட மனம் விரிவடைகிறது

மகா ஆபத்தின் காலத்தில், அந்த நாளின் ஆரம்பத்திலேயே அக்கினி ஆரம்பிக்கிறது. இங்கே அக்கினி என்பது இதே விதமானதாக காணப்படுகிறது. கர்த்தரின் நியாயந்தீர்ப்பு பூமியில் எல்லா இடங்களிலும் இருக்கும். உலகத்தின் ஜனங்கள் நீதியைக் கற்றுக்கொள்ளுவார்கள். யூத தேசத்தை முன்னரே எரித்த அக்கினியைக் குறித்து கர்த்தர் பேசினார். கிபி 70ஆம் வருடத்தில் அவர்களது ஆட்சி அமைப்பு முறை முற்றிலுமாக அழியும்வரை ஆபத்து அவர்கள் மேல் வந்தது. ஆகையால் நாம் இப்பொழுது, ஏறக்குறைய அக்கினியானது அங்கும் இங்குமாக எரிந்து கொண்டிருப்பதை, ஓரளவுக்கு தீமை செய்பவர்களை அழித்துக்கொண்டிருப்பதை பார்க்கிறோம். (ஏசாயா 26:9; லூக்கா 12:49)

இது கொஞ்ச காலத்திற்கு போய்க் கொண்டிருக்கும். இது ஓரளவுக்கு மனித மனங்களை நீதி மற்றும் அநீதியான கொள்கைகளுக்கு விரிவுப்படுத்தும். இதற்கு முன் அறிந்திராத வியாபார முறைமைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. நாம் தற்கால அரசியல் புரட்டுகளை அதிக அளவில் கேள்விப்படுகிறோம். ஆனால் தற்காலத்தில் மிகவும் நீதியான, நியாயமான, வியாபார ஏற்பாடுகளை நாம் கேள்விப்படுகிறோம். இது இவர்கள் முற்பிதாக்களைக் காட்டிலும் நீதிமான்களாக இருக்கிறார்கள் என்பதினால் அல்ல, சிறந்த வியாபார முறைமைகளை கண்டுகொண்டு வருகிறார்கள். ஆனால் தற்கால நிகழ்வுகள் மகா ஆபத்துக் காலத்தை கொண்டு வரும். இதில் முதலாளிகளும் தொழிலாளிகளும் ஒருவரையொருவர் எரிப்பதற்கு நாடுவார்கள். இது சந்தேகத்திற்கிடமில்லாமல் மாபெரும் கிளர்ச்சியாக இருக்கும். முழு அமைப்பும் அராஜகத்தில் ஈடுபடும். எனினும் அது தற்காலிகமானதாகவே இருக்கும். ஏனெனில் மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்.

### யூகிப்பதைக் காட்டிலும் விழித்திருங்கள்

அப்போஸ்தலர் பேதுரு குறிப்பிடுவது போல, "வானங்களும்" "பூமியும்" எரியும். கிளர்ச்சி ஆரம்பத்தில் சபையிலும் இருக்கும். நாம் இப்பொழுது இறையிலார் மற்றும் சகல வகுப்பாரிடையேயும் மன எழுச்சியைக் காண்கிறோம். ஜனங்கள் கடந்த கால அவர்களது தலைவர்கள் மேல் நம்பிக்கை இழப்பதை காண்கிறோம். ஒரு மாபெரும் போராட்டம் மற்றும் குழப்பத்தினாலும் "வானங்கள்" அகன்று போவது போல் காணப்படுகிறது. இப்பொழுதுதான் நம்மேல் விசேஷித்த தாக்குதலின் மூலம் ஒரு திசை திருப்புதலை பெற்றுக் -கொண்டிருக்கின்றன. அவர்கள் ஒருவருக்கொருவர் அதிகம் செய்ய முடியாதிருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் நமக்கெதிராக என்ன செய்யலாம் என்பதில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

இதெல்லாம் வேதாகம பாடங்களில், யுகங்களின் மாற்றத்தில் சொல்லப்பட்டுள்ள உண்மைகளுடன் குறுக்கிடாது. மேசியாவின் ராஜ்யம் உலகிற்கு மாபெரும் ஆசீர்வாதங்களை கொண்டு வரும் என்கிற உறுதிமொழியை நாம் வேதவாக்கியங்கள் மூலம் பெறுகிறோம். இந்த ஆசீர்வாதங்கள் எப்படி வரும் என்று நாம் ஆச்சரியப்படுகிறோம். பூமிக்குரிய விவகாரங்களில் ஒரு புதிய ஏற்பாடு இருக்கும். ஆனால் சரீர சம்பந்தமான மாற்றம் என்னவாக இருக்கும் என்பதையோ அல்லது இவைகள் எப்படி கொண்டுவரப்படும் என்பதையோ நாம் அறியோம். இன்னொரு தண்ணீர் மண்டலம் இன்னொரு ஜலப்பிரளயத்தை ஏற்படுத்தும் என்று நாம் யூகிக்கக்கூடாது. ஏனெனில் உலகளாவிய இன்னொரு ஜலப்பிரளயம் இருக்காது என்று கர்த்தர் அறிவித்திருக்கிறார்.

வேதாகமம் வெளிப்படுத்தாதவைகளை நாம் யூகிப்பது நமக்கு ஞானமாக இருக்காது. நாம் நமது கண்களை திறந்து வைத்திருக்க வேண்டும். நமது மனங்களில் வேறு ஒரு கொள்கையை அனுமதிக்கக்கூடாது. நமது நம்பிக்கை எந்த ஒரு முறைமையிலும் இல்லை; ஆனால் சகல வல்லமைகளையும் உடைய ஒருவரிடம் இருக்கிறது. அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற அனைத்தும் நிறைவேறும் என்று நாம் உறுதியாக உணருகிறோம். நாம் நமது சொந்த மனதில் எதையும் தீர்மானிக்க வேண்டிய அவசியமில்லை. தானே மற்றவர்களுக்கு தெரியட்டும்.

### யுக மாற்றங்களின் அடையாளங்கள்

யோயேல் தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்ட பெந்தேகொஸ்தே ஆசீர்வாதம், ஊழியக்காரர் மற்றும் ஊழியக்காரிகள் மேலும் என்றும், மாம்சமான யாவர் மேலும் என்றும் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. இதன் பிரகாரம் தற்காலத்தில் ஊழியக்காரர்களும், ஊழியக்காரிகளும் கர்த்தருடைய விசேஷித்த ஆசீர்வாதங்களை பெற்றிருக்கிறார்கள்.

ஊழியக்காரர்கள் மற்றும் ஊழியக்காரரிகளின் ஆசீர்வாதங்களுக்கு முடிவில், மாம்சமான யாவர் மேலும் ஆவி ஊற்றப்படுகிற மற்ற தீர்க்கதரிசனம் நிறைவேறும். இது ஆயிர வருட யுகத்தில் அகில உலகமும் சபையினால் ஆசீர்வதிக்கப்படக்கூடிய காரியத்தை வெளிப்படையாக குறிப்பிடுகிறது. இது சம்பந்தமாக கர்த்தர் அடையாளங்களையும் அற்புதங்களையும், மேகங்கள், "இரத்தம், அக்கினி, புகைக்காடையும்" காண்பிப்பார் என்று காண்கிறோம். இந்த அடையாளமான பாஷைக்குறித்து நமக்கு திட்டமான அறிவு இல்லை. அது சமூக கிளர்ச்சி மற்றும் பற்றி எரிதல், அரசியல் பிரச்சனைகள் பொருளாதார பிரச்சனைகள் மற்றும் ஆபத்தின் காலத்துடன் இணைந்த தெய்வீக வல்லமையின் பெரும் வெளிப்பாடுகளை குறிக்கலாம்.

ஆனால் இதெல்லாம் யூகம் தான். நாம் ஒரு மாற்றத்தை எதிர்பார்க்கிறோம். இந்த மாற்றம் சரீர தொந்திரவுகளோடு இணைந்ததாக இருந்தால், தற்காலமே அது வருவதற்கான காலமாக இருக்கிறது. ஏனெனில் கர்த்தர் கூறுகிறதாவது: "என் பரிசுத்த பர்வதமெங்கும் (ராஜ்யம்) தீங்கு செய்வாருமில்லை, கேடு செய்வாருமில்லை." பேரழிவு இருக்கும் என்கிற இந்த யூகம் இந்த தீர்க்கதரிசனத்துக்கு இசைவாயிருக்காது. மாறாக, இப்படிப்பட்ட பேரழிவு மற்றும் மாற்றங்கள், சரீர பிரகாரமான அல்லது மின்சார சம்பந்தமானவை நடக்க இப்பொழுதே பொருத்தமான காலமாக இருக்கும். இந்த காலத்தைக் குறித்து தான் கர்த்தர், "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்" என்று முன்னெச்சரிக்கை பண்ணியிருக்கிறார். அப்பொழுதுதான், "நான்கு காற்றுகளும்" விழுந்துபோன தூதர்களும் விடுவிக்கப்படுவார்கள்.

இதெல்லாம் சேர்ந்து தான் "இதுவரை சம்பவித்திராத உபத்திரவ காலத்தை" உண்டாக்குகிறது. இந்த உபத்திரவ காலத்தில், "நீங்கள் தப்பி, பாத்திரவான்களாக எண்ணப்படு –வதற்கு எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள்." "இனி சம்பவிக்கப் போகிறவைகளுக்கு தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்க பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு விழித்திருங்கள்." (லூக்கா 21:36)

**R5318**

## ARE SUICIDES MORALLY RESPONSIBLE?

# தற்கொலைக்காரர்கள் ஒழுக்க ரீதியாக பொறுப்பானவர்களா?

**கேள்வி:** தற்கொலை செய்துகொள்கிறவர்களின் முடிவைப்பற்றி சரியான கருத்தை தயவு செய்து கொடுங்கள். அதற்காக அவன் தண்டிக்கப்படுவானா? அல்லது மரணமே அவனது தண்டனையா?

**பதில்:** தற்கொலைகள் நம்பிக்கையற்ற இழப்பு என்ற கொள்கை இருண்ட யுகங்களில் ஏற்படுத்தப்பட்டது. தற்கொலை கடைசி செயலாக செய்யப்பட்ட ஒரு பாவம் என்ற கருத்து, மனமும் இருதயமும் வாழ்க்கையின் கடைசி கணத்தில் தேவனுடைய ஏற்பாடுகளுக்கு இசைவாயில்லை என்பதை குறிக்கிறது. மரணம் எல்லா நம்பிக்கைகளையும் முடிவுக்கு கொண்டு வருகிறது என்ற கொள்கை, தற்கொலையின் சம்பளம் நித்திய ஆக்கினை என்று முடிவு செய்யப்பட்டது. இது எவ்விதத்திலும் முற்றிலுமாக தவறு என்று நாங்கள் நினைக்கிறோம். வேதாகமத்தின்படி சரியான கருத்து கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(1) ஆதாம் கீழ்ப்படியாதிருந்து, மரண தண்டனை கொடுக்கப்பட்டது. இப்படியாக அவரது இனம் மன தளவிலும், ஒழுக்கத்திலும் சரீரத்திலும் சாதகமற்ற சூழ்நிலைகளில் பிறந்தார்கள். சீரழிவில் சிலர் அதிகமாகவும் சிலர் குறைவாகவும் பிறந்தார்கள். சிலர் மிகவும் மோசமான சரீர நலத்திலும், சிலர் மிகவும் மோசமான ஒழுக்க நிலையிலும் சிலர் மிகவும் பலவீனமான மனபலத்திலும் பிறந்தார்கள். இப்படிப்பட்ட கிரியைக்கு இந்த மூன்றுமே கோபத்தை தூண்டுகிறதாக இருக்கிறது. நிச்சயமாக அவன் மனதளவில் பலவீனமுள்ளவனாகவோ, அறிவிக்கப்படாதவனாகவோ, அறியாமையுள்ளவனாக இருந்தான். இல்லையென்றால் அவன் தனது சொந்த உயிரையே எடுத்திருக்க மாட்டான். ஆதாமின் மீறுதலினால் அவனது மனதும் தீர்மானமும் பலவீனமாக இருந்ததுதான் அவன் கஷ்டம். அவன் ஆதாமின் தண்டனையில், மரண தண்டனையில் பங்குள்ளவனாக இருந்தான்; அவன் மரித்த போது, அவன் எப்படி இறந்தான் என்பது முக்கியமல்ல, அவன் தண்டனையின் விளைவின் கீழாக முழுமையாக வந்தான், வேறொன்றுமில்லை. மரண தண்டனையில், நித்திய ஆக்கினை எந்த விதத்திலும் அறிவிக்கப்படவில்லை. "பாவம் செய்கிற ஆத்துமா சாகும்."

(2) தேவன் ஆதாம் மேல் இரக்கங்கொண்டார். ஆனால் தெய்வீக நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்து, குற்றத்தை நீக்கும் வழியில் அல்ல, ஆனால் வேறு வழியில், கிறிஸ்துவின் மரணத்தினால் மீட்கும் பொருளை கொடுத்து ஆகும். தெய்வீக ஏற்பாட்டின்படி இயேசுவின் மரணம் ஆதாமின் பாவத்தை மூடுகிறது; அவரது ஆதி மீறுதலையும் அதன் தண்டனைக்கு மாத்திரமல்ல, ஆனால் உலகத்தின், அவரது பிள்ளைகளின் அனைத்து மீறுதல்களுக்காகவும் ஆகும். அது அவனது மனதளவிலான, ஒழுக்க ரீதியான, சரீர குறைபாடுகளை ஏற்படுத்தியது.

(3) தேவனுடைய கிருபை மனதளவிலான வியாதியை மட்டுமல்ல, ஒழுக்க ரீதியான, சரீர அளவிலான வியாதியையும் உள்ளடக்குகிறது. சகல மனுக்குலமும் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்டிருக்கிறார்கள்.

(4) உலகத்தின் மீட்பு மரண தண்டனையிலிருந்து முடிவாக விடுவித்ததை குறிப்பிடுகிறது. சகலரையும் விடுவிப்பதற்காக தேவன் நியமித்த காலம் கிறிஸ்துவின் ஆளுகையின் ஆயிரம் வருட யுகமாகும். பிறகு சகல மனுக்குலமும் ஆதி தண்டனையிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். இழந்த அனைத்தையும் திரும்பப்பெற முழு சந்தர்ப்பமும் கொடுக்கப்படுவார்கள். மனத்தளவிலும் ஒழுக்க ரீதியிலும் வியாதியுள்ளவர்களும், சரீர ரீதியிலும் தளர்வுற்ற அனைவரும் முழு மானிட பூரணத்திற்கும் திரும்பக்கூடிய சந்தர்ப்பத்தை பெறுவார்கள்.

(5) ஆதாமின் ஆதி பூரணத்திற்கு திரும்ப வருகிற இந்த ஒழுங்குக்கு சுவிசேஷ யுகத்தில் உலகத்திலிருந்து அழைக்கப்பட்டவர்கள் மட்டுமே விதி விலக்கு. இவர்கள்

கிறிஸ்துவின் மரணத்திலிருந்து அவரது இரண்டாம் வருகை வரைக்கும் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக அழைக்கப்பட்டு, இயேசுவுடன் இணைந்து, தெய்வீக சுபாவத்திற்கும் அவரது அதிகாரத்திற்கும் உயர்த்தப்படுத்தலில் பங்கு பெறுவார்கள். இவர்கள் கிறிஸ்துவின் மீட்பின் பலியின் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுகிறார்கள் (பூரணமாக கருதப்படுகிறார்கள்). பிறகு அவர்கள் தங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்கும் சந்தர்ப்பம் கொடுக்கப் -படுவார்கள். (ரோமர் 12:1)

(6) கிறிஸ்தவர்கள் இந்த சுவிசேஷ யுகத்தில் தெரிந்தே பாவம் செய்து, இப்படியாக தேவனுடனான சகல உறவுகளையும் இழந்து இரண்டாம் மரணத்தில் மரிக்கிறது போல, வரக்கூடிய ஆயிரம் வருட யுகத்திலும், உலகம் பொதுவாக, சத்தியத்தைக் குறித்த சரியான அறிவுக்கு கொண்டு வரப்பட்ட பிறகு, தெரிந்தே செய்த பாவத்தினால் தேவனுடனான சகல உறவுகளையும் இழந்து இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள்.

(7) சபையின் பாவங்கள் மாத்திரமல்ல, முழு உலகத்தின் பாவங்களும் தேவனுடைய ஏற்பாட்டினால் கிறிஸ்துவின் பலியினால் மூடப்பட்டிருக்கின்றன என்று அறிவிப்பதில், பாவிகள், சகல தண்டைகளிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நாம் புரிந்து கொள்ளக்கூடாது, மாறாக, ஒருவர் அபூரண அறிவைப் பெற்றிருந்தாலும், ஒவ்வொருவரும் தனது செய்கைகளுக்கு பொறுப்புடையவர்களாக இருக்கிறார்கள். இயேசு குறிப்பிட்டது போல, ஒருவரது பொறுப்பு அவர் பெற்றிருக்கிற அறிவுக்குத் தக்கதாக இருக்கிறது.

ஒருவன் தனது எஜமானின் சித்தத்தை அறிந்து, அதன்படி செய்யாதிருந்தால் பல அடிகள் அடிக்கப்படுவான், கடுமையான தண்டனை கிடைக்கும் என்றும், ஒருவன் தனது எஜமானனின் சித்தத்தை சரியாக அறியாதிருந்து அதன்படி செய்யாதிருந்தால், சில அடிகள் அடிக்கப்படுவான், இலகுவாக தண்டிக்கப்படுவான் என்றும் ஆண்டவர் அறிவித்தார். சில சமயங்களில் அந்த அடிகள் அல்லது தண்டனை தற்கால வாழ்வில் வருகிறது. சபை வகுப்பாருக்கு இது போல ஒரே மாதிரி இருக்கும். ஆனால் எல்லாரும் தண்டனையை இந்த வாழ்க்கையிலேயே பெறுவதில்லை. எனினும் அவர்கள் வரக்கூடிய வாழ்க்கையில் நீதியாக பெறுவார்கள். அப்போஸ்தலர் அறிவிப்பதாவது: "சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து, நியாயந்தீர்ப்புக்கு முந்திக் கொள்ளும்; சிலருடைய பாவங்கள் அவர்களைப் பின் தொடரும்." (1தீமோத்தேயு 5:24)

(8) மேலே சொல்லப்பட்டதின்படி, தற்கொலை செய்து கொண்ட எவரும் கிறிஸ்துவின் மகிமையடைந்த சபையின் ஒரு அங்கமாக இருக்கக்கூடும் என்று நம்பிக்கைக் கொள்ள கூடாது. ஆனால் பெரும்பாலும் உலகத்தாரில் அங்கமாக இருந்து மற்ற உலகத்தாரோடு நித்திய ஜீவனா அல்லது நித்திய மரணமா என்கிற சோதனையில் மேசியாவின் ராஜ்யத்தின் சாதகமான சூழ்நிலைகளின் கீழ் இருப்பார்கள். உலகத்தாரில் தற்கொலை செய்து கொண்ட சிலரைக் காட்டிலும் அதிக அளவில் வெளிப்படையான பரிசுத்தவான்களில் சிலர் தங்களது சொந்த காரணத்தினால் ஜீவனை இழக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நினைத்து இந்த காரியத்தில் நாம் பிடிவாதமாக இருக்கலாகாது.

## R5318 THE RACE-COURSE OF THE AGE - IT'S "CLOUD OF WITNESSES"

# யுகத்தின் ஓட்டப்பந்தய சாலை – அதன் "மேகம் போன்ற சாட்சிகள்"

"ஆகையால்,மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மை சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்."–எபிரேயர் 12:1

இந்த வசனத்தின் ஆரம்ப வார்த்தைகள், பரிசுத்த பவுல் முந்தய அதிகாரத்தில் சொன்னவைகளுக்கு நமது மனதை பின்னோக்கி நடத்துகிறது. கடந்த கால இந்த விசுவாச குணசாலிகள் நிறைவேற்றின மாபெரும் காரியங்களை கவனிக்கும் போது, அவர்கள் தேவனிடத்தில் கொண்டிருந்த விசுவாசத்தையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தினார்கள்; அவர்கள் தங்களையும் தங்களது பூமிக்குரிய உரிமைகளையும், சலுகைகளையும் வெறுக்க விருப்பங்கொண்டார்கள். இப்படியாக திரளான சாட்சிகள், தியாகிகள், நம்மை சுற்றியிருக்க, அவர்களது உதாரணங்களின் உத்வேகம், நமது ஓட்டத்தில் மாபெரும் விசுவாசத்திற்கு நம்மை தூண்ட வேண்டும்.

அப்போஸ்தலர் பழங்கால பாத்திரர்களை, "மேகம் போன்ற சாட்சிகள்" என்று கூறுகிறார். அவர் சாட்சிகள் என்ற வார்த்தையை, தற்காலத்தில் பயன்படுத்துகிறது போல பார்வையாளர்கள் என்ற பொருளில் பயன்படுத்தவில்லை. ஆரம்பத்தில் சாட்சிகள் என்பது சத்தியத்தின் சாட்சிகள், தியாகிகள் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டது. ஆகையால் இந்த வசனம் பொருள் படுத்துகிறதாவது: சத்தியத்துக்கு சாட்சியாக வாழ்ந்தவர்கள், தியாகிகள், தங்கள் சொந்த சலுகைகள் மற்றும் வாழ்க்கையிலிருந்தே துண்டிக்கப்பட்டவர்களின் சாட்சிகள் உங்களை சூழ்ந்திருக்கிறதை நீங்கள் பார்க்கும் போது, அது உங்களில் பலமான தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இந்த பழங்கால பாத்திரர்கள் அவர்களது வாழ்க்கையின் சாதனைகள் மூலம் நம்மை கீழே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

பழங்கால பாத்திரர்கள் இறந்து போயிருந்தாலும் அப்போஸ்தலருடைய உருவக பேச்சிலிருந்து நீக்கப்பட வேண்டியதில்லை. இப்படியாக அறிக்கை பொதுவாக நம் அனைவராலும் பயன்படுத்தப்படுகிறது. உதாரணத்திற்கு ஒரு சமயத்தில் நெப்போலியன் தனது படையை நோக்கி கூறியதாவது: "எனது மனிதர்கள் முப்பது நூற்றாண்டுகளுக்கு முன் உன்னை பின்னோக்கி பார்க்கிறார்கள்." சரியாக சொல்லுவோமானால், நூற்றாண்டுகள் பின்னோக்கி பார்க்க முடியாது. ஒரு வார்த்தைக்கு அப்படி சொல்லலாம். ஏனெனில் கடந்த காலத்தில் நடந்த காரியங்களை முப்பது நூற்றாண்டுகள் மற்றும் இன்னும் அதிகமாக கவனித்து புரிந்து கொள்ளலாம்.

நம்மை சுற்றியிருக்கிற இந்த "மேகம் போன்ற சாட்சிகளை" நமக்கு ஞாபகப்படுத்த அப்போஸ்தலர் விரும்புகிறார். ஆகையால் நாம் இந்த ஓட்டத்தை உண்மையாக ஓட வேண்டும். இந்த மேன்மையான குணசாலிகள், நாம் பெறப்போகிற பரிசை பெற முடியாவிட்டாலும், அவர்களுக்கென்று ஒரு பரிசு இருக்கிறது. அவர்களுக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த இலக்கை அடைய அவர்கள் எப்படி உண்மையுடன் சகித்து சாதித்தார்கள் என்பதை நாம் நினைவுகூர்ந்து, நமக்கு முன்னே வைக்கப்பட்டுள்ள கனம், மகிமை மற்றும்

சாகாமை என்கிற இலக்கை அடைய எவ்வளவு ஜாக்கிரதையாக ஓட வேண்டும்!

இந்த "மேகம் போன்ற சாட்சிகள்" நம்மை தொடர்ந்து சுற்றிக்கொண்டிருக்கிறது. பழங்கால பாத்திரர்களின் அனுபவங்களே நமது அனுபவங்களாக இருக்கின்றன. நமது பிரயாணத்தின் ஒவ்வொரு படியிலும் அவர்களது ஓட்டத்தைப் பற்றி கூர்ந்த சிந்தனையில் நாம் உற்சாகத்தையும் பலத்தையும் காண்கிறோம். அப்போஸ்தலர் நமது தலைப்பு வசனத்தின் சித்திரத்தை நமக்கு கொடுப்பதில், நாம் ஒரு ஓட்டப்பந்தயத்தில் ஓடிக்கொண்டிருக்கிறோம் என்பதை கவனிக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார். தற்கால வாழ்க்கையின் காரியங்களை நாம் ஒரு ஓட்டப்பந்தய சாலையிலிருந்து நோக்க வேண்டும்.

பரிசுத்த பவுல் அவரது காலத்தில் மிகவும் பிரபலமாயிருந்த கிரேக்க விளையாட்டுகளை விசேஷமாக ஓட்டப்பந்தயத்தை தனது மனதில் வைத்திருந்தார் என்பதில் சந்தேகமில்லை. ஆகையால் கனம், மகிமை மற்றும் சாகாமை என்ற ஓட்டப்பந்தயத்தில் இருப்பவர்களுக்கு அவரது ஆலோசனை அவரது மனதின் சித்திரத்தை அடிப்படையாக் கொண்டிருக்கிறது. அந்த ஓட்டப்பந்தயத்தில் இருப்பவர்கள் அத்தியாவசியமாக தேவையற்றவைகளை நீக்குவது போல, கிறிஸ்தவர்கள் அவர்களது ஓட்டத்திற்கு தடையாயிருப்பவைகளையும் சுமைகளையும் ஒதுக்கி வைத்து, அவர்களுக்கு முன்னே வைக்கப்பட்டுள்ள ஓட்டத்தில் பொறுமையோடே ஓட வேண்டும்.

### எதெல்லாம் சுமையாக இருக்கிறது?

ஒதுக்கி வைக்க வேண்டிய சுமைகள் பல்வேறு மனிதர்களுக்கு வேறுபடுகிறது. ஒருவர் பட்டங்களையும், கனத்தையும் சுதந்தரித்திருக்கலாம். பரிசுத்த பவுல் இவர்களில் ஒருவராக இருந்தார். அவர் ஒரு ரோம பிரஜையாக இருந்தார். இது அவரது காலத்தில் மிகவும் கனத்துக்குரியதாக இருந்தது. அவர் கிறிஸ்தவ ஓட்டப்பந்தயத்தில் நுழையும் போது இந்த தனியுரிமையை ஒதுக்க வேண்டியிருந்தது. எனினும் சத்தியத்தினிமித்தம் தன்னை ரோம பிரஜை என்று தேவைப்படும் போது சொல்லிக்கொண்டது அவருக்கு அனுகூலமாக இருந்தது. எனினும் அவர் இரட்டை வேஷம் போடவில்லை. எனினும் உலக அங்கீகாரத்திற்காகவோ மற்றும் தனக்கு அனுகூலமாகவோ அவர் பயன்படுத்தவில்லை. மற்ற சமயத்தில் கர்த்தரின் ஜனங்களிடத்தில் ஐக்கியத்திற்காக பயன்படுத்தவில்லை. ஒரே காரியத்தை மட்டுமே செய்தார். அது குறித்து அவர் கூறுகிறதாவது: "சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேன் என்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்." (பிலிப்பியர் 3:13,14)

இன்னொரு சுமை செல்வம். இதன் மூலம் அவர் அதிக செல்வம் உடையவராய் ஒரு பெரிய வீட்டை பெற்றிருந்து, அநேக வேலைக்காரர்களை கொண்டிருந்து அவரது வகுப்பினரைப் போன்று வாழக்கூடிய எண்ணம் ஓட்டப்பந்தயத்தில் தடையாக இருக்கும். எனினும் அவர் கர்த்தருடைய பிள்ளைகளின் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும். இன்னொரு சுமை சில வகையிலான திறமையாகும். இன்னொரு சுமை மனிதர்களின் அங்கீகார அன்பு முதலானவை.

கனம், நித்திய மகிமைக்கான பந்தயத்தில் ஜெயங்கொள்ள விரும்புகிற அவர் அந்த எல்லா சுமைகளையும் அவர் அங்கீகரித்த மற்றவைகளையும் ஒதுக்கி வைக்க வேண்டும். இல்லையென்றால் அவர் ஊனமுற்றவராக இருந்து நல்லபடியாக ஓடமாட்டார். சிலர் முற்றும் ஜெயங்கொண்டவர்களாயிருந்து பரிசை பெறுவார்கள். மற்றவர்கள், ஊனமுற்றவர்களாயி-ருப்பதினால் இரட்சிக்கப்பட்டு, தாழ்ந்த நிலைமையே பெறுவார்கள்.

இந்த பூமிக்குரிய கடமைகளாகிய இலட்சியம், கனங்கள் முதலானவைகளை அவர் எப்படி மதித்தார் என்று பரிசுத்த பவுல் நமக்கு சொல்லுகிறார். அவர் கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய பரம அழைப்பின் பரிசுடன் இவைகளை அவர் நிறுத்தும் ஒப்பிட்டும் பார்த்தார். இந்த பூமிக்குரிய லாபமாயிருந்தவைகளை நஷ்டமும் குப்பையுமாக தீர்மானித்தார். ஆகையால் அவைகள் அனைத்தையும் தூக்கி எறிந்தார்.

பூமிக்குரியவைகளை பிடித்துக் கொண்டிருப்ப-வர்களைக் குறித்து கர்த்தர் அறிவிப்பதாவது: "ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது?" இந்த செல்வம் வெறும் தங்கத்தை மட்டும் குறிக்காதபடி கனம், அந்தஸ்து, வல்லமை, ஜனங்களின் ஆதரவு முதலானவைகளை குறிக்கும். இவைகளெல்லாம் பரிசுக்காக அழைக்கப்பட்டிருக்கிற பந்தயத்திற்கு ஒரு தடையாக இருக்கும் என்பதை நிரூபிக்கிறது.

கடந்தகால விசுவாச சாட்சிகளை பின்னோக்கி பார்க்கும் போது, அவர்கள் மிகவும் குறைவான சுமைகளையே தங்களோடு எடுத்துச் சென்றார்கள் என்பதைக் காண்கிறோம். அவர்கள் தங்கள் சுமைகளை தூக்கி எறிந்துவிட்டு, தங்களுக்கு இருக்கிற பாதையில் பொறுமையோடே ஓடினார்கள்.

எனினும், எல்லா சுமைகளும், தடைகளும் தூக்கி எறிய வேண்டியவைகளல்ல. தன் மனைவி மற்றும் குழந்தைகளுடன் ஓட்டப்பந்தயத்தில் நுழைகிறவன் அவர்களை ஒதுக்க வேண்டியதில்லை. அவனது ஒவ்வொரு தோளிலும் ஒரு குழந்தை இருக்குமானால், அவர்களுடனே அவன் ஓட வேண்டும். ஆனால் பிரம்மச்சாரியாக இருக்கிறவன் ஓட்டப்பந்தயத்தில் ஓட விரும்பினால், ஒவ்வொரு தோளிலும் எத்தனை குழந்தைகளை சுமக்க வேண்டும் என்பதையும் அல்லது மனைவியையும் தோள்களில் சுமக்க வேண்டுமா என்பதையும் தீர்மானிக்க வேண்டும். சிலருக்கு மனைவியுடன் இருப்பது தடையாக இருக்கும். ஆனால் சிலருக்கு மனைவியில்லாமல் தடையாக இருக்கும். ஆகையால் எது சிறந்தது என்பதை ஒவ்வொருவரும் தீர்மானிக்க வேண்டும். நாங்கள் பிரமாணம் எதையும் வைக்க விரும்பவில்லை.

### பரம்பரை பலவீனங்களும் சுற்றி நெருங்கியிருக்கிற பாவங்களும்

நமது தலைப்பு வசனத்தின் பிற்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிற சுற்றி நெருங்கியிருக்கிற பாவங்களைப் பற்றி பார்ப்போம். இன்னொரு மொழி பெயர்ப்பில் சுற்றி கட்டிருக்கிற பாவம் என்றும், அதாவது நம்மை நெருங்கி சுற்றியிருக்கிற பாவம் என்றும் கூறப்பட்டிருக்கிறது. சில பாவங்கள் தளர்வாக பறக்கிற உடையைப் போலவும் மற்றவைகள் நம்மை நெருங்கி சுற்றிக் கொண்டிருக்கிறவைகளைப் போலவும் இருக்கின்றன. இந்த தடைகளுடன் ஓடுபவர், அவ்வப்போது ஓட்டத்திலிருந்து விலகி நேரத்தை இழக்க வேண்டியிருக்கும்.

நாம் எந்த விதத்திலும் பாவத்தை தவிர்க்க வேண்டும். பாவம் செய்ய யாருக்கும் உரிமை இல்லை. நம்மை நெருங்கி சுற்றிக்கொண்டிருக்கிற பாவத்தை முற்றிலும் விலக்க முடியவில்லை என்றால், அது நம்முடைய ஓட்டத்தை தடை செய்யாத அளவுக்கு அதை நாம் விலக்க

வேண்டும். இந்த பாவம் பரம்பரை பலவீனத்தினால் உண்டாயிருந்தால், ஒருவரின் இயற்கையான சுபாவமாக இருந்தால், என்ன செய்வது? பிறகு அவர் நடக்காமல். உட்காராமல், வெற்றிக்கொள்ள முழு சத்தியையும் பயன்படுத்தி, ஒவ்வொரு தசையையும் பயன்படுத்தி ஓட்டப்பந்தயத்தில் ஓட வேண்டும். இதைத்தான் நமது வசனத்தில் அப்போஸ்தலர் நமக்கு முன் வைக்கிறார்.

கர்த்தர் வேதாகமத்தில் இந்த காரியத்தை நமக்கு முன் தெளிவாக வைத்திருக்கிறார். ஓட்டப்பந்தயம் கற்பனையானதல்ல, உண்மையான ஒன்று. இந்த பந்தயத்தை கர்த்தர் ஏற்பாடு செய்திருக்கிறார். அவர் நிச்சயமாக சில நிபந்தனைகளை வைத்திருக்கிறார். அவரது உதவியும் பந்தய முடிவில் பரிசும் எதிர்பார்க்கப்பட வேண்டும். வேத வாக்கியங்களில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கமான தகவல்களுக்கும், சகல உதவிகள் மற்றும் ஊக்களுக்கும் மற்றும் நம்மை சுற்றியிருக்கிற இந்த மாபெரும் சாட்சிகளின் மேகங்களுக்கும் நாம் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். மேலும் கர்த்தரின் கிருபையினால், நாம் பொறுமையோடு ஓடுவோம்; ஏனெனில், பரிசுத்த ஆவியின் இந்த கிருபை இல்லாமல், வழியில் ஒருவன் விழுந்து விடுவான், எல்லாவற்றையும் சீக்கிரத்தில் இழந்து விடுவான்.

### இடையறாத எச்சரிக்கை அவசியம்

ஒருவர் ஒரு சில அடிகள் ஓடலாம். ஆனால் இவர்களில் சிலர் மானிட வாழ்க்கையின் காரியங்கள் அவர்களை தடை செய்வதை கண்டு, தேவையற்ற சகல சுமைகளையும் விட்டு விடவேண்டும்என்றுஉணர்ந்து,முயற்சிப்பதில்பிரயோஜனம் இல்லை, தியாகம் அதிகம் என்று நினைக்க ஆரம்பிக்கிறார்கள். ஆகையால் அப்போஸ்தலர் பொறுமையோடு இருக்கும்படி ஊக்குவிக்கிறார். ஏனெனில் இந்த சகல சோதனைகள், கஷ்டங்கள் முதலானவைகள், சரியாக ஏற்பட்டு குணலட்சணத்தை அபிவிருத்தி செய்கிறது. உண்மையான, விசுவாசமுள்ள குணசாலிகள் நீதியில் உருவாக்கப்பட வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். அவர் தம்முடைய பிள்ளைகளுக்கு கொடுக்கிற இப்படிப்பட்ட நீதியான அனுபவங்களினால் தவிர, இவர்கள் அபிவிருத்தி பண்ணப்பட்டு, விளக்கப்பட முடியாது.

அப்போஸ்தலர் ஈடுபட்டிருந்த பந்தயத்திற்கான நிபந்தனைகளையும் விதிமுறைகளையும் நன்கு அறிந்திருந்தார். இந்த விதிமுறைகளின்படி வாழவில்லையென்றால் அவர் ஜெயங்கொள்ள முடியாது என்பதை அறிவார். மிகவும் நெருக்கமான கவனமும் தளராத எச்சரிக்கையும், குறித்த காலத்தில் குறிக்கோளை அடைய தேவை என்பதை அவர் அறிந்தார். ஓட்டப்பந்தய காலத்தில் யார் ஜெயங்கொள்ளுவார்கள், ஜீவ கிரீடத்தை பெறுவார்கள் என்பது நிச்சயமில்லாதிருக்கும். ஒலிம்பிக் மற்றும் கிரேக்க விளையாட்டுகளில் மிகவும் விரும்பத்தக்க வெற்றி கிரீடத்தை யார் பெறுவார்கள் என்பது எப்பொழுதும் நிச்சயமில்லாதிருந்தது.

பூமியில் நடக்கும் எந்த பந்தயத்தைக் காட்டிலும் கிறிஸ்தவர்களின் ஓட்டம் மிகவும் சிறப்பானது. நாம் ஓடுகிற இலக்கையும் நமக்கு பாதுகாப்பு இருக்கிறது என்பதையும் அறிந்து நாம் உண்மையுடன் ஓடினால் பரம அழைப்பின் பரிசை அடைவோம் என்பதையும் நாம் அறிவோம். வெறும் பலத்திற்காக ஒரு பந்தயமல்ல நம்முடையது; வேதாகமத்திற்காக ஒரு வெற்றி, இந்த பந்தயத்தில் அவனது முயற்சியின் ஆர்வத்திற்கு தக்கதாக ஒவ்வொருவரும் பரிசை பெறுவார்கள். ஒருவன் தன் முழு ஆத்துமாவோடும் முழு பலத்தோடும் ஓடினால் அவன் நிச்சயமாக பரிசை பெறுவான். இதற்கு முன் இப்படிப்பட்ட பந்தயம் இருந்ததில்லை! இந்த பந்தயத்தில் வைக்கப்பட்டிருக்கிற இப்படிப்பட்ட மகிமை இதற்கு முன் நமக்கு முன் வைக்கப்படவில்லை!

**R5319**

## THE TWO PARTS TO SANCTIFICATION
## பரிசுத்தமாக்குதலின் இரண்டு பகுதிகள்

"உமது சத்தியத்தினால் அவர்களை பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்."– யோவான் 17:17

பரிசுத்த யோவான் எழுதிய சுவிசேஷத்தில் 17 ஆம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஜெபமானது நமது கர்த்தரின் நினைவுகூருதலின் இராப்போஜனத்திலிருந்து கெத்செமனே தோட்டத்திற்கு செல்லும் வழியில் ஏறெடுத்ததாகும். இந்த ஜெபமானது அப்போஸ்தலருக்கும் கர்த்தரின் வசனத்தினால் அவரது சீஷர்கள் அல்லது பின்னடியார்களானவர்களுக்கும் ஏறெடுக்கப்பட்டது என்பதை நாம் அறிந்து கொள்ளுகிறோம்.

பரிசுத்தமாக்கு என்ற வார்த்தை பிரித்து வை, புனிதப்படுத்து என்பதை குறிப்பிடுகிறது. பரிசுத்தமாக்குதல் என்ற இந்த வேலையில் இரண்டு பாகங்கள் இருக்கின்றன. முதலாவது ஆரம்பத்தில் நாம் செய்வது என்னவென்றால், தேவனுடைய சித்தத்தை அறிந்து, அதன்படி செய்யும் விருப்பத்துடன் நம்மை நாமே பிரித்துக்கொள்வது. அதன் இரண்டாவது பகுதி படிப்படியாக வருவதாகும். அதாவது நாம் இதற்குமுன் அறிந்திராத போதனைகளும் அறிவுறுத்தல்களும் மற்றும் நாம் இதற்கு முன் அங்கீகரித்திராத சில நீதியின் கொள்கைகள். இதுதான் ஆழமாக பிரித்து வைத்தல். இது பிதாவானவரின் ஏற்பாட்டின்படி தேவனால் செய்யப்படுகிறது.

பரிசுத்தமாக்குதல் என்பதின் ஆழமான பொருள் வசனத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே நமது கர்த்தர் இந்த வேலையை செய்யும்படி பிதாவானவரிடம் ஜெபிக்கிறார். இயேசுவை பின்பற்றி நடக்க சீஷர்கள் எல்லாவற்றையும் விட்டிருந்தார்கள். அவர்கள் பிரிக்கப்பட்டிருந்தார்கள். அதாவது பிதாவானவரின் சித்தத்தை அறிந்து, அதன்படி செய்ய விருப்பங் கொண்டிருந்தார்கள். "எல்லாரும் தேவனால் போதிக்கப்பட்டிருப்பார்கள்" என்று எழுதப்பட்டிருக்கிறபடி நமது கர்த்தர் தெய்வீக அறிவுறுத்தலின் வேலை அவர்களில் நடைபெற வேண்டும் என்று ஜெபித்தார். சீஷர்களின் தெய்வீக கிருபையின் அறிவுறுத்தலுக்கு வரவேண்டும் என்று ஆண்டவர் விரும்பினார். அது தேவனுடைய வசனத்தின் மூலம் வரும் என்று குறிப்பிட்டார்.

நாம் இப்பொழுது பெற்றிருக்கிறது போல, அந் சமயத்தில் வசனங்களிடங்கிய வேதாகமம் இல்லை. ஏனெனில் புதிய ஏற்பாடு அப்பொழுது எழுதப்படவில்லை. எனினும் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள சத்தியம் தேவனுடைய முழு சத்தியமும் அல்ல, ஒரு பகுதி மட்டுமே. நமது கர்த்தர் ஜெபித்தது, அவரது சீஷர்கள் பொதுவான சத்தியத்தின் ஒரு பகுதியை மாத்திரம் பெற வேண்டும் என்பதற்காக அல்ல, அவர்கள் தெய்வீக திட்டம் மற்றும் நோக்கத்தின் அறிவை பெற்றிருக்க வேண்டும் என்பதற்காகவேயாகும்.

ஒரு மனிதனின் வாழ்க்கையில் ஏறக்குறைய சத்தியமானது வந்து கொண்டிருக்கலாம். அது அவனது மனதை விழித்தெழச் செய்யும். அது வேதியியலைப்

பற்றிய சத்தியமாக இருக்கலாம் அல்லது மற்ற விஞ்ஞான அறிவைப்பற்றி இருக்கலாம். புவியியல் பற்றிய சத்தியமாகவோ, சூரியன் முதலானவைகளைப் பற்றிய சத்தியமாகவோ இருக்கும். அது அவனது மனதில் செல்வாக்கு செலுத்தி, விழுந்துபோன நிலையிலிருந்து சிறிதளவு உயர்த்தும். ஆனால் நமது கர்த்தர் குறிப்பிடுகிற சத்தியம் இவைகளல்ல. பூமியின் நிறை அல்லது நட்சத்திரங்களுக்கு இடையேயான தூரம் போன்ற அறிவைக் காட்டிலும் மிகவும் அவசியமானவை.

பொதுவாக உலகத்திற்கு வரும் பல்வேறு சத்தியங்களும் அவர்களை சிந்திக்கும்படி வழிநடத்தி, முடிவாக அவர்களுக்கு ஒரு இரட்சகரை தயார்படுத்த வேண்டிய அவசியத்தை குறிப்பிடுகிறது. இது பிற்காலத்தில் தேவனால் இழுக்கப்படுவதை மாத்திரமல்ல, அவர்கள் தங்களை பிரித்துவைப்பதையும் செய்யும். ஏறக்குறைய இந்த பொதுவான சத்தியம் தெளிவாக இருந்து, தனிப்பட்டவர்களை உண்மையான பள்ளிக்கு கொண்டு வரும். இதை நாம் தயார்படுத்தும் மார்க்கம் (படிப்பு) என்று கூறலாம். கிறிஸ்துவின் பள்ளியில் உண்மையான படிப்புக்கு முன்னதாக இப்படிப்பட்ட தயார்படுத்தும் மார்க்கம் இருக்க வேண்டும்.

### பரிசுத்தமாக்குதலின் முதல் பகுதி

உண்மையான பரிசுத்தப்படுத்துதல் ஆரம்பிப்பதற்கு முன்னதாக ஒரு பரிசுத்தப்படுத்துதல் நடைபெறுகிறது. கர்த்தர் இஸ்ரயேல் ஜனங்களிடம் கூறுகிறதாவது: "நீங்கள் உங்களை பரிசுத்தப்படுத்தி பரிசுத்தராயிருங்கள். நான் உங்களை பரிசுத்தப்படுத்துவேன்." இது ஒரு நம்பிக்கையினால் தங்களை பிரித்து வைத்துக்கொள்ளுதல் ஆகும். ஆனால் ஒருவர் தன்னை பரிசுத்தப்படுத்தி பிரித்துக்கொள்ளும் என்பது ஒன்று, தேவன் அவனை பரிசுத்தப்படுத்துதல் என்பது மற்றொன்று. இந்த யுகத்தின் அழைப்பைப் பொறுத்தவரை குமாரனாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்; பிதாவானவர் ஒருவனை தன்னிடத்தில் இழுத்துக்கொள்ளாவிட்டால் ஒருவனும் குமாரனிடத்தில் வரமாட்டான்.

முதலாவது சுபாவ சிந்தை மூலமாக பிதாவானவருடைய இழுத்துக் கொள்ளுதல் வருகிறது. சிருஷ்டிகரை அறிந்துகொள்ளுகிற விருப்பமாகிய இயற்கையான இழுத்துக்கொள்ளுதலுடன் மனிதனுடைய மூளை அமைக்கப்பட்டுள்ளது. தேவனை அறிந்தேயிராத, வேதாகமத்தை பெற்றிராத புறஜாதிகளிடத்தில் இதை நாம் காண்கிறோம். இந்த ஜனங்கள் ஒரு இயற்கையான சாய்வை அல்லது தேவனை ஆராதிக்கக்கூடிய விருப்பத்தை பெற்றிருக்கிறார்கள். ஆதாமின் விழுகையினால் அதிகமாக நெறிதவறிபோயிராத மூளையின் இந்த சுபாவத்தை பெற்றிருப்பவர்கள் கர்த்தரின் கிருபையினால் சத்தியத்திற்கும், வெளிச்சத்திற்கும் வழிநடத்தப்படுகிறார்கள். ஒருவேளை அவர்கள் இயேசுவை ஒரு கீர்த்தனை அல்லது ஒரு கைப்பிரதி அல்லது ஒரு புத்தகம் மூலமாக அறிந்திருக்கலாம்.

இந்த இயற்கையான இழுத்தலினால், தேவனை ஏற்றுக்கொள்ளுவதற்கான விருப்பம் முதலாவது படியாகும். அவர்கள் வழியில் நுழைய வரும் போது, அது இடுக்கமானதாக, கஷ்டமானதாக அதன் "வாசல்" தாழ்வானதாக இருப்பதை கற்றுக்கொள்ளுகிறார்கள். அநேகர் நிச்சயமாக திரும்பிச் செல்கிறார்கள். எல்லோரையும் தேவன் தேடவில்லை. மிகவும் ஒரு விசேஷித்த வகுப்பாரை அவர் தேடிக்கொண்டிருக்கிறார். ஆகையால் வழியின் இடுக்கத்தினாலும் வாசல் தாழ்வாக இருப்பதினாலும் ஊக்கம் இழந்தவர்களை அவர் தேடுவதில்லை. இப்படிப்பட்டவர்களை திரும்பிப் போகப்பண்ணவே இந்த நிலைமைகள் இப்படியாக ஆக்கப்பட்டன.

வழியின் இடுக்கத்தினாலும் வாசல் தாழ்வாக இருப்பதினால் பின்வாங்கிப் போனவர்களுக்கு நித்திய ஆக்கினையே கிடைக்கும் என்று முன்னாளில் நாம் நினைத்தோம். இப்பொழுது நல்ல கிரியை செய்யக்கூடிய அவரது சித்தத்தை செய்ய நாடுகிற ஒரு விசேஷித்த வகுப்பாரை தேவன் தேடிக்கொண்டிருக்கிறார் என்பதைக் காண்கிறோம். தேவையான அளவு வைராக்கியத்தை வெளிப்படுத்தாதவர்கள் தொடர்ந்து செல்ல முயற்சித்தால் ஒரு வேளை காயப்படுவார்கள். ஆகையால் கர்த்தர் கூறுகிறதாவது: 'என்னுடைய சீஷர்களாக முடிவு செய்வதற்கு முன்னரே நிபந்தனைகளைக் கவனித்து, செல்லும் செலவை கணக்கு பார்த்து, காரியத்தின் கனத்தைப் பார்க்க வேண்டும். பிறகு எனது சீஷனாக நீ தீர்மானித்தால், என்னைப் பின்பற்றி வா?'

ஒருவன் கர்த்தருடைய சீஷன் ஆன பிறகு, அவன் நமது தலைப்பு வசனத்தில் அவர்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள வகுப்பாரின் நிபந்தனைக்குள் வருகிறான். இந்த வகுப்பில் பன்னிரண்டு அப்போஸ்தலர்களும், பரிசுத்த பவுல் குறிப்பிடுகிற வேறு ஐந்நூறு சகோதரர்களும் மற்றும் விசுவாசமுள்ள இருதயத்துடனும் உண்மையுடனும் நமது கர்த்தரை ஏற்றுக்கொண்டிருக்கிற சுவிசேஷ யுகத்திலுள்ள அனைவரும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட அனைவருக்கும் இந்த ஜெபம் பொருந்தும்; "உமது சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்!"

பாதையின் முடிவு என்று நாம் நினைத்திருந்த இது அதன் ஆரம்பமாக இருக்கிறது என்று சொல்வது விநோதமாக இருக்கிறது. நாம் செய்ய வேண்டியது எல்லாம் இயேசுவை ஏற்றுக்கொள்ளுவதுதான் என்பது முன்னாளில் நமது எண்ணமாக இருந்தது. நமது நண்பர்கள் கூறினதாவது: இயேசுவை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; 'நீங்கள் அவரை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். எல்லாம் அவ்வளவு தான். இப்பொழுது இயேசுவைப் பற்றி மற்றவர்களுக்கும் சொல்லுங்கள்.'

ஆனால் நாம் சத்தியத்தை அறிய வந்தபிறகு, நாம் இன்னும் அதிகமாக தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமாயிருக்கிறது. ஒருவர் தனது சிந்தனையை பின்னுக்கு தள்ளி, முதலில் எந்த அளவுக்கு அவர் சத்தியத்தை அறிந்திருந்தார் என்பதை நினைத்துப் பார்த்தால், தான் ஒரு பாவி என்பதையும், தான் கிறிஸ்துவிடம் சென்றால் பிதாவானவர் தன்னை பிரித்து வைப்பார் என்பதையும் அறிந்திருந்ததை தெளிவாக உணர்ந்து கொள்ளுவார். இதைத்தான் பரிசுத்த பவுல் குறிப்பிடுகிறார். "நற்கிரியைகளை செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்." (எபேசியர் 2:10) முன்னரே குறிப்பிட்டது போல இந்த பிரித்து வைத்தல் பிதாவனவரால் அவரது சத்தியத்தின் மூலம் செய்யப்படுகிறது.

### பரிசுத்தப்படுத்துகிற சத்தியம்

பரிசுத்தபடுத்தும் இந்த சத்தியம் பொதுவான அறிவின் நிலைப்பாட்டிலிருந்து பார்க்கப்படுகிறதில்லை. ஏனெனில் இந்த சத்தியம் உலகத்திற்கானதல்ல, அவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டதல்ல. அது அர்ப்பணம் செய்தவர்களுக்கானது, தேவனுடைய

பிள்ளைகளானவர்களுக்கானது. தேவன் தம் குடும்பத்திற்கு கொடுக்கக்கூடிய ஒருவகையான சத்தியம். தேவன் தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை கிறிஸ்து மூலம் நம்மிடத்தில் காண்பிக்கும்படியாக தம்முடைய தீர்மானத்தின்படி நம்மை அழைத்திருக்கிறார். (எபேசியர் 2:7) தேவன் ஒரு தீர்மானம் வைத்திருக்கிறார். அது வரும் யுகங்களில் அவரது மகா திட்டத்தின் கூடுதலான அபிவிருத்தியை முழுவதும் விளங்கச்செய்யும்.

ஒரு விசேஷித்த வகுப்பாரை அழைத்து, தெரிந்து கொண்ட பொழுது தேவன் ஒரு விசேஷித்த தீர்மானத்தை வைத்திருந்தார். பரிசுத்தப்படுத்தம் வேலையை செய்கிற விசேஷித்த சத்தியமானது அவரது யுகங்களின் மகா திட்டத்தின் சத்தியமாக இருக்கிறது. அவர் இவையனைத்தையும் உடனே அறியச் செய்யவில்லை. அவரது திட்டத்தில் வெளிப்படுத்தல் நூற்றாண்டு காலமாக போய்க் கொண்டிருக்கிறது. இந்த வெளிப்படுத்தலில் சில தீர்க்கதரிசிகள் மூலமாகவும், சில இயேசு மூலமாகவும் சில அப்போஸ்தலர் மூலமாகவும் வந்திருக்கின்றன. இந்த வெளிப்படுத்தல்கள் பரிசுத்தமாக்குதலுக்கான பரலோக ஏற்பாடாக இருக்கிறது.

எனினும் நாம் பெற்றிருக்கிற திட்டம் மற்றும் திட்டத்திற்கு மேலான இன்னும் சில காரியம் கூட தேவைப்படுகிறது. இந்த சத்தியம் பரிசுத்தமாக்குதலின் வழியாக இருந்தால் கூட, பல்வேறு மற்ற காரியங்களும் கவனிக்கப்பட வேண்டும். “உமது சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தப்படுத்தும், உமது வசனமே சத்தியம்.” உதாரணத்திற்கு ஒருத்தி ஒரு குழந்தையை பராமரிக்கிறாள் என்றால், அவள் அதற்கு தேவையான உணவு, சுத்தமான காற்று, உடற்பயிற்சி முதலானவைகளைப் பற்றி சிந்திக்க வேண்டும். இதே போல தேவனுடைய பிள்ளைகளோடும் கூட இருக்கிறது. அவர்களது கவனத்திற்கு ஏற்ப சத்தியமானது படிப்படியாக திறக்கப்படுகிறது. நமது அறிவுகள் பயிற்சியடைவதற்கு பிதாவானவர் நம்மை பல்வேறு அனுபவங்களில் வழி நடத்துகிறார். நமது அனுபவங்கள் மற்றும் பராமரிப்புகளும் நம்மை சிந்திக்கவும், சரியாக பகுத்துணரவும், ஆராயவும், விசாரிக்கவும் செய்கிறது. நாம் இப்படி செய்வதால், இந்த அனுபவங்கள் மற்றும் பராமரிப்புகளினால் நாம் அபிவிருத்தி அடைகிறோம். இந்த அனுபவங்கள் எதை அர்த்தப்படுத்துகிறது?அது எதை போதிக்கிறது? என்பதை கவனிக்க நாம் வழிநடத்தப்படுகிறோம்.

தேவனுடைய வசனமே நமது அறிவுறுத்தல்கள் அனைத்திற்கும் அடிப்படையாக இருக்கிறது. இது மட்டுமே நமது அறிவுக்கு போதுமானதல்ல. வாழ்க்கையின் பல்வேறு அனுபவங்கள் மூலமாக பல்வேற பாடங்கள் இருக்கின்றன. குழந்தைகள் சும்மா சாப்பிடுவது, தூங்குவது மட்டும் தான் செய்கின்றன. நடக்க தெரியாததால் எங்கேயும் போவதில்லை. அதே போல் தான் தேவனுடைய பிள்ளைகளும்.

### பரிசுத்தமாக்குதலின் இரண்டாம் பகுதி

தேவன் நம்மை ஒருபுதிய அழைப்புக்கு அழைத்திருக்கிறார். நாம் ஒரு புதிய சுபாவத்தை பெற வேண்டியவர்களாயிருக்கிறோம். நம்முடையது பூமிக்குரிய சுபாவம் அல்ல. நமது அழைப்பின் உண்மையான குறிக்கோள் மற்றும் நோக்கம், மனிதர்களுக்கும், தேவதூதர்களுக்கும் மேலான அவரது புதுசிருஷ்டியாக நம்மை தகுதிப்படுத்தவும் உருவேற்படுத்தவும் ஆகும். தேவதூதர்கள் மற்றும் மனிதர்கள் போன்ற சகல சிருஷ்டிகளையும் ஆசீர்வதிக்கவும், மற்றவர்கள் குடியேறப்போகிற மற்ற உலகங்களாகிய தேவனுடைய பிரபஞ்சத்தின் அபிவிருத்திக்காகவும் நாம் தெய்வீக வாய்க்காலாக இருக்கப்போகிறோம். தேவனுடைய திட்டத்தின் நோக்கத்தை நாம் பார்க்கும் பொழுது, நமக்கு ஏன் தேவன் சோதனைகளையும் அனுபவங்களையும் தருகிறார் என்பதற்கான காரணங்களை நாம் காண்கிறோம். நமது கர்த்தராகிய இயேசு ஒரு இரக்கமுள்ள மகா பிரதான ஆசாரியராக இருக்க வேண்டியிருந்தார். அதற்காகவே அவரது சோதனைகளும் அனுபவங்களும் இருந்தன. மந்தைகளின் மேய்ப்பனாகிய நமது கர்த்தராகிய இயேசுவுக்கு துன்பப்படுவது அவசியமாயிருந்ததால். நாம் பூரணப்படுவதற்கு நாம் துன்பப்பட வேண்டியது எவ்வளவு மிகவும் அவசியமாக இருக்கிறது!

நாம் போதனைகள், பாடுகள், துன்பங்களைப் பெற்று நாம் உதவிகளைப் பெற்றால்தான் மற்றவர்களுக்கு நாம் உதவி செய்ய அறிந்துகொள்ளுவோம். இப்பொழுது கர்த்தருடைய பிள்ளைகளில் உண்மையாக இருக்கக்கூடியவர்கள் ஆண்டவரின் குணலட்சணத்தில் விசேஷமாக அபிவிருத்தி அடைவார்கள். அவர்கள் மூப்பர்களாகும்படி சலுகை பெற்றவர்கள், இளையவர்கள், சாந்தம், தயவு, பொறுமை, நீடிய பொறுமை, சகோதர அன்பு மற்றும் அன்பு போன்ற ஆவியின் கனிகள் மற்றும் கிருபைகளில் வளரும்படியாக அவர்களை போஷிப்பிக்கவும் போதிக்கவும் நாம் சலுகை பெறறிருக்கிறோம். ஆகையால் கர்த்தருடைய ஜனங்களில் சட்டாம்பிள்ளையாக நிற்பவர்கள், உண்மைத்தன்மை, விசுவாசம் ஆகியவைகளை வெளிப்படுத்துகிறவர்களாக, செருக்கான ஆவியை அல்ல தாழ்மையான ஆவியை, ஊழியம் செய்யும் ஆவியை வெளிப்படுத்துகிறவர்களாக இருக்க வேண்டும்.

பரிசுத்தமாக்குதல் என்பது ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கை முழுவதிலும் படிப்படியாக நடக்கக்கூடிய ஒரு வேலையாக இருக்கிறது. இது மரணத்தருவாயில் மட்டுமே பெறக்கூடியதல்ல, ஆனால் அர்ப்பணத்திற்கு பிறகு சீக்கிரத்தில் அடையக்கூடிய ஒன்று. அர்ப்பணமானது கதவைத்திறந்து, நிற்குதலை அவனுக்குத் தருகிறது, அவனுக்கு உறவைத் தருகிறது, தெய்வீக வாக்குத்தத்தின் தாங்குதலையும், ஊக்கத்தையும் அவனுக்குத் தருகிறது, பாதையில் அவனை வைக்கிறது, ஆவியின் கனிகளில் அவனை வளர்க்கிறது. முடிவாக பரலோக மகிமையில் கர்த்தருடன் உடன் சுதந்தரத்தை அடையச் செய்கிறது. கிறிஸ்துவின் சரீரத்தில் இந்த நிற்குதலை பராமரிக்க அன்பு மற்றும் பக்தி போன்ற சான்றுகளுடன் கனிகள் தேவைப்படுகிறது.

அதன்பிறகு, ஊழியத்தில் உண்மைத்தன்மையையும், எந்த அளவுக்கு நெருக்குதலை சகிப்பான் என்பதையும், தப்பறை போதகமாகிய பலமான காற்றை எந்த அளவிற்கு தாங்கி நிலை நிற்பான் என்பதையும், மாம்சம் மற்றும் பிசாசின் தாக்குதல்களை தாங்கி சத்தியத்திருந்து விலகாதிருப்பான் என்பதையும் அறிய சோதனைகள் வரும்.

கர்த்தர் நமது திராணியை அறிவார் என்றும், ஒவ்வொரு சோதனையிலிருந்து தப்பிக்கும்படியான போக்கை ஏற்படுத்துவார் என்றும் வேதவாக்கியங்கள்

நமக்கு கூறுகின்றன. நாமனைவரும் சோதிக்கப்படுவோம். அக்கினி கடுமையானதாக இருந்தால், இன்னும் போனால் நம்மை அழித்துவிடும் என்றால் கர்த்தர் அதை தடுத்து விடுவார். காலப்போக்கில் நாம் பலம் அடைவோம். பிறகு அவர் இன்னும் பெரிய சோதனைகளைத் தருவார். ஆகையால், "நீ, உன் கர்த்தராகிய தேவனை உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் நேசிக்கிறாயா என்று கர்த்தராகிய உன் தேவன் உன்னை சோதிப்பார்."

### திராணிக்கு ஏற்றவாறு சோதனைகள்

உலோக தாது வல்லுனர் தனது உலோகத்தை சோதித்து நிரூபிக்கிறார். அவர் அதை சோதித்து அதன் கசடுகளை நீக்குகிறார். அவர் அடுத்த இராசாயன இலக்கியை **(Flux)** பயன்படுத்தி மற்ற அழுக்குகளை நீக்குகிறார். பிறகு மற்ற இலக்கி முதலானவைகளை பயன்படுத்தி சுத்தப்படுத்துகிறார். இதே போலவே கர்த்தர் கசடுகளை நீக்குகிறார். நமது மாம்சத்தின் எல்லா அழுக்குகளையும் நீக்குவதில்லை; ஏனெனில் புது சிருஷ்டி பூரணப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. கசடுகள் நமது சிந்தையில் இருப்பது நமக்கு தெளிவாக தெரிவதால், நாம் புது சிருஷ்டிகளாக அதை நீக்குவதற்கு தேவனிடம் நாம் அதிகமாக ஒத்துழைப்புதர வேண்டும்.

ஆகையால் கர்த்தருடைய ஜனங்கள் அதிகமதிகமாக சத்தியத்தினால் பரிசுத்தப்படுத்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். வசனம் பரிசுத்தப்படுத்துகிறது. பிறகு பரிசுத்தமான, புனிதமான சிந்தனைகளை அனுப்புகிறது. நமது வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும் பரிசுத்தப்படுத்தி, எதிர்காலத்தில் தேவனுடைய ஊழியத்திற்கு தகுதியுள்ளவர்களாக்க வேண்டும்.

ஒருவர் அதிகமான சோதனைகளை பெறுகிறார் என்றால் அவரிடம் அதிகமான கசடுகள் இருக்கும் என்பது உண்மையாக இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. நமது கர்த்தராகிய இயேசு தனது சீஷர்களைக் காட்டிலும் அதிகமான சோதனைகளை பெற்றார். அவர் பூரணராக இருந்தார். இந்த சோதனைகள் நமக்கு "மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது" என்று பரிசுத்த பவுல் நமக்கு என்று அறிவிக்கிறார். நமது எதிர்கால பிரகாசம் நாம் இப்பொழுது பெறுகிற இருதய அபிவிருத்தி மற்றும் குணலட்சண அபிவிருத்தியை சார்ந்திருக்கிறது. நமது கர்த்தராகிய இயேசு சோதனைகளில் அதிகமான விசுவாசத்தை காண்பித்ததால் அவர் மிகவும் உயர்ந்த நிலைமையை பெறுவார். கர்த்தரின் சகோதரர்களில் சிலர் தீவிரமான சோதனைகளில் விசுவாசத்தை நிரூபித்ததால் உயர்ந்த நிலைமையை பெறுவார்கள். இந்த சோதனைகளை தற்கால வாழ்க்கையிலும் வரக்கூடிய வாழ்க்கையிலும் நம்மை உயர்ந்த இடத்திற்கு தகுதிப்படுத்துகிறது.

"ஆம். தேவனுடைய பிள்ளைகள் அவரது சூளையில் சோதிக்கப்படுகிறார்கள்;

முடிவுவரை சகிப்பார்கள் மும்மடங்கு சந்தோஷப்படுகிறார்கள்!

ஆனால் கடுமையான சோதனையில் யார் நிலைக்கக்கூடும்?

யார் சிலுவையிலிருந்து பரிசுத்தமாக வருவார்கள்

யாருடைய அக்கினி கண்கள் முழுவதுமாக காண்கிறதோ,

அவன் தனது உருவத்தை ஆத்துமாவில் காண்பான்.

"மறைந்து போகின்ற கண நேர பார்வையால் அல்ல,

கண்ணாடியில் சுத்திகரிக்கப்படுபவரின் முகத்தை,

ஆனால் பரலோக முத்திரை குத்தப்பட்ட இம்மானுயேலின் அம்சங்கள்

சத்தியமும் கிருபையும நிறைந்து காணப்படும்;

அந்த அன்பின் முத்திரையை சுற்றி நீதிவாக்கியம்

'ஒரு கணம் மட்டுமல்ல, ஆனால் நித்தியத்துக்கும்' காணப்படும்."

**R5321**

## THE SPIRIT OF SERVICE THE SPIRIT OF DISCIPLESHIP

## ஊழியத்தின் ஆவியே சீஷத்துவத்தின் ஆவி

"உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாக இருக்க விரும்பினால்,
அவன் உங்களுக்கு ஊழியக்காரனாக இருக்கக்கடவன்." - மத்தேயு 20:27

சரியான ஆசைகள் அதை உடையவருக்கும் அவருடன் தொடர்பு கொள்ள விரும்புகிறவர்களுக்கும் மிகவும் பிரயோஜனமானது. நமது கர்த்தரும் ஒரு ஆசையை பெற்றிருந்தார். அவரைப்பற்றி நாம் வாசிக்கிறதாவது: "அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்தார்." (எபிரேயர் 12:2) மதிக்கத்தக்க தூண்டுதல்கள் அங்கும் உண்டு; இல்லையென்றால் பிதாவானவர் தமது குமாரனுக்கு மு;னபாக ஒரு ஆசையை வைத்திருக்கமாட்டார். இந்த தற்கால காரியங்களில் நாம் உண்மையுள்ளவர்களாயிருந்தால், கர்த்தர் அநேகவற்றின் மேல் நம்மை ராஜாவாக வைப்பார் என்ற சிந்தையே நம்மை ஊக்குவிக்க வேண்டும். தேவனை அன்புகூருகிறவர்களுக்கென அவர் வைத்துள்ள -வைகளை அடைவதற்கான தீவிரமான விருப்பம் பாராட்டத்தக்கது: ஏனெனில் இவைகள் தேவனுயை ஆசீர்வாதங்கள்.

ஒவ்வொரு புது சிருஷ்டியும் மேலான விருப்பங்களை பெற்றிருக்கிறார்கள். உண்மையிலேயே, ஒவ்வொருவரும் தான் முயற்சிக்கிறதை நோக்கிய ஒரு குறிக்கோளை பெற்றிருக்க வேண்டும். அதை அடைவதற்கான விருப்பத்தை கொண்டிருப்பது, விருப்பத்திற்கு பின்னால் ஒரு நோக்கம் இருப்பதை குறிக்கிறது. மனதிற்கு முன்பாக தூண்டுதல்களை பெற்றிருப்பது மொத்தத்தில் சரியானதாக இருக்கிறது. நமது பிரயாசங்களுக்கு தகுதியானது எத்தன்மையானது என்பதை அறிந்துகொள்ளுவது சரியானதாக இருக்கிறது. இல்லையென்றால் தவறானவைகள் நம்மை வழி தவறச் செய்யும். நமது தலைப்பு வசனத்தில் மிகவும் பாராட்டத்தக்க விருப்பம் நமக்கு முன்னே வைக்கப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவின் பிரதிநிதியாகிய சபை, மாம்சத்தில் இருக்கும் நமது கர்த்தரின் சரீரமாக இருக்கிறது. அப்போஸ்தலர் பவுல் உயர்ந்த நோக்கத்தைக் குறித்து பேசும் போது, தாங்கள் மந்தைக்கு போதகர்களாகவும் அறிவுரையாளர்களாகவும் இருக்கக்கூடிய மிகவும் அனுகூலமான விருப்பங்களை கொண்டிருக்க வேண்டும் என்று சபைக்கு அறிவுரை கூறுகின்றார். ஏனெனில் இது சபையில் மிகவும் முக்கியமான பயனுள்ள அலுவலாக இருக்கிறது. பரிசுத்த பவுலின் காலத்தில் அந்நிய பாஷையில் பேசுவது ஒரு வரமாக இருந்தது. அது மிகவும் குறிப்பிடத்தகுந்த ஒரு வரம். அந்நிய பாஷையில் பேசுவதைக் காட்டிலும் சபையில் வேறு சில வரங்கள் பயனுள்ளதாக இருக்கும் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார்.

இந்த அற்புத வரங்களை நாம் இப்போது பெற்றிருக்கவில்லை. ஆனால் நாம் தேவனுடைய வசனத்தையும் கர்த்தருடைய சத்தியத்தை அறியக்கூடிய விருப்பத்தையும் பெற்றிருக்கிறோம். ஆகையால்

பிரசங்கம் பண்ணக்கூடிய வரம் இன்னும் விரும்பப்படத்தக்க ஒன்றாக இருக்கிறது. நம்மேல் கட்டுப்படுத்தும் செல்வாக்கையுடைய ஆவியின் கனிகளை நாம் பெற விரும்ப வேண்டும் என்று மேலும் குறிப்பிடுகிறார்.

## ஒவ்வொரு சபையின் மீதுள்ள பொறுப்பு

சபையில் நமது பொறுப்பின் நிலைமை பொருத்தவரை, கர்த்தரை அதை வைப்பார் என்று அவர் குறிப்பிட்டார். “இப்பொழுது தேவன் தமது சித்தத்தின்படி அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்தில் வைத்திருக்கிறார்.” இந்த அமைப்பின்படியே சரீரத்தில் வைக்கப்பட வேண்டும் என்று தேவன் நியமித்திருக்கிறார்; உதாரணத்திற்கு, கண்ணின் வேலை, கண் என்கிற அங்கம் சரீரத்திற்கு மிகவும் உதவிகரமான ஒன்றாக இருக்கிறது போல சபையில் உள்ள கண்ணுக்கு ஒப்பான அங்கம் கிறிஸ்துவின் சரீரத்திற்கு மிகவும் உதவிகரமாக இருக்கிறார். மேலும் காது அங்கங்கள், பாத அங்கங்கள், கை அங்கங்கள் மற்றும் நாக்கு அங்கங்களும் இருக்கிறார்கள். இந்த பல்வேறு அங்கங்கள் முழு சரீரத்திற்கும் வெவ்வேறு ஊழியங்களை செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள். கையானது காலை நோக்கி, “நீ எனக்கு வேண்டியதில்லை” என்று சொல்லக்கூடாது. காலும் கையை நோக்கி அப்படிச் சொல்லக்கூடாது. (1கொரிந்தியர் 12:14-31)

சரீரமானது கையால் நடக்க முயற்சித்தால், அது தெய்வீக முறைமை கிடையாது. சரீரமானது காலால் நடக்க வேண்டும். ஆகையால் அது ஒரு சபை, சபையானது பாத அங்கங்களை அதிகமாக சார்ந்திருந்தால், கை அங்கங்களின் பயன்பாட்டை இழப்பதாக இருக்கிறது. பல்வேறு அங்கங்கள் மிகவும் திறமையாக ஊழியம் செய்வதற்கு அதனதன் நிலையில் இருக்க வேண்டும். வேறுவார்த்தையில் சொல்லுவோமானால், தேவனானவர் ஒவ்வொரு அங்கத்தையும் எந்த ஊழியத்திற்கு தயார் பண்ணியிருக்கிறார் என்பதை அறிய சபையானது நாட வேண்டும். சரியான நபரை சரியான இடத்தில் வைக்க தங்களது சரியான தீர்மானத்தை நாட வேண்டும்.

சபையானது எப்பொழுதாவது காலால் நடக்காமல் கையால் நடக்க முயற்சிப்பதை நாம் பார்க்கிறோம். தெய்வீக பராமரிப்பினால் ஒவ்வொரு அங்கத்தையும் தகுதிபடுத்தியிருக்கிற இடத்தில் வைக்காததினால் சபையானது இழப்பை அடைகிறது. சரியானபடி வைப்பது சபையின் பொறுப்பாக இருக்கிறது. எனினும் அது சரீரத்தை காலால் நடக்க வைப்பதற்கு பதிலாக கையால் நடக்க வைக்க முயற்சித்தால் ஒருவேளை அது ஏற்ற காலத்தில் கற்றுக்கொள்ளும். அதாவது கைகளை அதன் வேலையை அப்பியாசப்படுத்தச் செய்யும். அதே போல கால்களை அதன் வேலையை அப்பியாசப்படுத்த செய்யும்.முடிவாக ஒவ்வொரு அங்கமும் தகுதியான ஊழியத்தை செய்வார்கள்.

## பணிவு தேவனுடைய ஊழியத்திற்கு இன்றியமையாதது

சபையின் அங்கங்கள் தவறான ஸ்தானங்களில் இருப்பது சபைக்கு தீமையாக இருப்பது மாத்திரமல்ல, தாங்கள் செய்ய வேண்டிய வேலையைக் காட்டிலும், வேறு ஊழியங்களில் ஈடுபட முயற்சிப்பது அங்கங்களுக்கு தவறானதாக இருக்கும். நமது இயற்கையான சுபாவத்திற்கு மாறாக வேறு ஊழியத்திற்கு மாறுவது நமது சக்தியில் இல்லை. சரீரத்தில் வேறு ஊழியத்தை செய்வதற்கு தெய்வீக சக்தி மட்டுமே நம்மை தயார் பண்ண முடியும். கர்த்தருக்கு ஊழியம் பண்ண கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஊழியம் பண்ணக்கூடிய சரியான மனோபாவம் இருக்க வேண்டும். நம்மால் செய்யக்கூடிய ஊழியம் எங்கெங்கே இருக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். “செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்.”

சபையில் வேறு யாராவது செய்கிற வேலையை தாங்கள் செய்ய விரும்புவதே அநேகரிடம் உள்ள பிரச்சனையாக இருக்கிறது. அவர்களுக்கு கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும் விசேஷமாக விசுவாச குடும்பத்தாருக்கு நன்மை செய்ய வேண்டும் என்ன எண்ணத்தில் நம்மால் எப்பொழுதும் செய்யக்கூடியது என்ன என்பதை அவர்கள் தங்களைச் சுற்றி பார்ப்பதில்லை. அவர்கள் சரியான சீஷத்துவத்தின் ஆவியை பெற்றிருக்கவில்லை. ஆகையால் நமது தலைப்பு வசனத்தின் கட்டளையானது அவர்களை பின்வருமாறு சொல்ல வழிநடத்த வேண்டும். “தேவனுக்கு பிரியமாக ஊழியம் செய்வதே எனது உயர்ந்த நோக்கமாக இருக்க வேண்டும். நாம் ஊழியம் செய்யும் இடத்திலே அவர் என்னை வழி நடத்துவராக. இங்கே ஒரு சிறிய இடமும் அங்கே ஒரு சிறிய மூலையும் இருக்கிறது. எனது ஸ்தானத்தில் தேவையானதாகச் செய்ய நான் முயற்சி செய்வேன். கர்த்தர் வழியை திறந்து, முக்கியமானதாக காணப்படுகிறதை எனக்கு காண்பித்தால் நான் அதை எடுத்துக்கொள்ளுவேன். ஆனால் அது பெருக்கிற வேலையாக இருந்தாலும், ஒரு கூட்டத்திற்கு ஒரு மண்டபத்தை ஏற்பாடு செய்வதாக இருந்தாலும், அதை எனது பலத்துடன் செய்வது எனது கடமையாக இருக்கும். எப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பம் கிடைத்தாலும் நான் அதைச் செய்வேன்.”

நமக்கு எந்த ஒரு ஆசையும் இல்லை என்று இதற்கு பொருலல்ல; கட்டுப்படுத்தும் உந்துவிசை சபைக்கு ஊழியம் செய்வதாகும். இங்கே உயர்ந்த நோக்கத்தை, சரியான விருப்பத்தை நாம் பெற்றிருக்கிறோம். சிலர் தலைவராக இருக்க வேண்டும் என்கிற இலட்சியம் உடையவர்களாக காணப்படுகிறார்கள். நமது இலட்சியம் (அது கர்த்தரின் ஆவியாக இருக்கும் என்று நம்புகிறோம்) தனது நிலையிலிருந்து தலைமை ஸ்தானத்தை அடைய விரும்புகிறவர்களுக்கு உதவுவதாக இருக்கக்கூடாது, இப்படிப்பட்ட காரியத்திற்கு உதவுவது அவனுக்கும் கர்த்தரின் காரியத்திற்கும் தீமை செய்வதாக இருக்கும். ஆனால் ஒருவன் அவனது கைக்கு நேரிடுகிறதை வல்லமையுடன் செய்ய விரும்புகிறதை நாம் காண்போமானால் இது கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்டதாக இருக்கும் என்றும் உறுதியாக இருக்கலாம். ஒருவேளை கர்த்தர் பிற்காலத்தில் கர்த்தருக்கான ஊழியத்தில் அவரது உண்மைத்தன்மையை அங்கீகரித்து சில முக்கியமான வேலைகளைக் கொடுப்பார்.

## சுய நாட்டம் நிராகரிக்கப்பட வேண்டும்

கர்த்தர் அவனுக்கென்று கொடுத்திருக்கிறவைகளில் ஒவ்வொருவரும் திருப்தியடைய வேண்டும். அவன் சுயநாட்டம் உடையவனாக இருக்கக்கூடாது. “தன்னை உயர்த்துகிற எவனும் தாழ்த்தப்படுவான், தன்னை தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்.” (லூக்கா 18:14) தன்னைத்தான் உயர்த்துகிறவன் சபையினால் உயர்த்தப்படுகிறவன் அல்ல. ஏனெனில் அவன் கர்த்தரால் உயர்த்தப்பட மாட்டான்; தன்னைத்தான் தாழ்த்துகிறவன் சபையின் வாக்குகளினாலோ அல்லது கர்த்தருடைய சித்தத்தினாலோ உயர்த்தப்படுவான்.

நமது தலைப்பு வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல கர்த்தர் இதைத்தான் அர்த்தப்படுத்துகிறார் என்று நாம் நினைக்கிறோம். உங்களில் சிலர் தலைவராக அங்கீகரிக்கப்படுகிறது அவசியம். சபையில் பல்வேறு ஊழியங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு சபையின் ஊழியங்களுக்கு ஒரு தலைவர் இருப்பது அவசியம். தேவன் அவனை அங்கீகரித்திருக்கிறார். அவர் இயேசுவை தலைவராக்கினார். சுய நாட்டம் உடைய சாத்தானால் அவர் கடந்து போகப்பட்டார். அவர் இயேசுவை தேர்ந்தெடுத்து, வழியை அவருக்கு குறுகலாக்கினார்! இயேசு தாழ்ச்சியை நிரூபித்த பிறகு பிதாவானவர் மேலாக அவரை உயர்த்தினார், வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மாபெரும் பரிசை அவருக்கு வழங்கினார்.

இயேசு வெளிப்படுத்தின அதே ஊழியத்தின் ஆவியை, தாழ்மையின் ஆவியை உடையவர்களை பிதாவானவர்

இப்பொழுது தேடிக்கொண்டிருக்கிறார். பிதாவானவர் அவருக்கு ஊழியக்காரனின் நிலையைக் கொடுத்ததையும், தலைவரின் நிலைமையை கொடுத்தததையும் நாம் பார்க்கிறோம், நாம் நோக்குகிறோம். இயேசு எல்லாருக்கும் ஊழியக்காரராக இருந்ததை நாம் பார்க்கிறோம். ஆகையால் தேவன் அவரை உயர்த்தி ஒவ்வொரு நாமத்திற்கும் மேலான நாமத்தைக் கொடுத்தார்.

ஒவ்வொரு சிறிய சபையிலும் இதே போலவே இருக்க வேண்டும். முதன்மையான ஊழியக்காரராயிருக்கும் ஒவ்வொருவரும் தலைவராக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது தேவனுடைய சித்தமல்ல. ஆனால் தன்னை தாழ்மையான இருதயமுடையவனாக காண்பித்துக் கொள்ளுகிற ஒருவனை தேவன் அங்கீகரிப்பார். ஏனெனில் சகோதரர்களுக்கு எதையும் செய்வதில் அதுபோல தன்னை காண்பித்துக் கொண்டிருக்கிறார். அப்படிப்பட்டவன் உங்களுக்கு ஊழியக்காரனாக இருக்கக்கடவன். உங்களுக்குள், கர்த்தரின் சகோதரருக்குள் மேலான கனத்துக்குரியவனே ஊழியக்காரனாயிருக்க வேண்டும். மிகவும் உண்மையுள்ள ஒருவனுக்கே ஊழியம் பண்ணும் சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டும். இவ்விதத்திலேயே அவன் உங்கள் தலைவனாக இருப்பான்.

**R5322**

## A GOD FEARING BAD MAN

# தேவனுக்கு பயந்த ஒரு கெட்ட மனிதன்

எண்ணாகமம் 22:1 to 23:10

''இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்.'' – யாக்கோபு 1:8

இஸ்ரயேலர்கள் கானானுக்குள் நுழைந்து, அவர்கள் தேவனுடைய பரிசுத்த ஜாதி என்று அங்கீகரிக்கப்பட்ட பிறகு தேவனுக்கும் புறஜாதிகளுக்கும் இடையே இருந்த தொடர்பு நிறுத்தப்பட்டது. அதற்கு முன்பாக தேவனிடத்தில் வெளியரங்கமாக விசுவாசமாக இருந்தவர்களை தேவன் அங்கீகரித்தார். உதாரணத்திற்கு, ஆபிரகாம், யோபு, மெல்கிசேதக் மற்றும் பிலேயாம் போன்றவர்கள். இன்றைய பாடம் கடைசியாக குறிப்பிடப்பட்ட பிலேயாம் பற்றியது: ஆபிரகாம் கானானுக்கு வருவதற்கு முன் அவர் விட்டு வந்த யூப்ரட்டீஸ் நதிக்கரையில் வாழ்ந்தவன் பிலேயாம். அவன் நன்மைக்காக சொன்னாலும் தீமைக்காக சொன்னாலும் அதை நிறைவேறும் என்று தூர தேசத்திலும் அறியப்பட்டவன். அதாவது அவன் தேவவாக்கு உடையவன் என்று கருதப்பட்டான்.

இஸ்ரயேலர்கள் போரிட்ட அனைவரையும் வெற்றிக்கொண்டார்கள் என்பதை உணர்ந்த மோவாபியர் ராஜா, தங்களை அவர்கள் தொந்தரவு பண்ணாதிருந்தும் மிகவும் பயந்தான். அவன் மீதியானியரின் மூப்பரிகளிடம் ஆலோசனை பண்ணினான். பிறகு நானூறு மைலுக்கு அப்பால் யூப்ரட்டீஸ் நதியருகே வாழ்ந்த பிலேயாமுக்கு செய்தியனுப்பி, அங்கே வந்து இஸ்ரயேலர்களை சபிக்கும் படி சொல்லச்சொன்னான். தகுந்த சன்மானம் கொடுத்து அனுப்பப்பட்டது.

தீர்க்கத்தரிசி பிலேயாம், இந்த வேலைக்கு போகலாமா வேண்டாமா என்று கர்த்தரிடம் விசாரித்தான். கர்த்தரின் உத்திரவு போகக்கூடாது என்பது தான்; அவர்கள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், அவர்களை சபிக்க வேண்டாம். பிலேயாம் முடிவைச் சொன்னான். வந்த பிரபுக்கள் திரும்பினார்கள். மோவாபின் இராஜா பாலாக் இன்னும் அதிக கனவான்களான பிரபுக்களை அதிகமான சன்மானத்துடன்அனுப்பினான். இந்த காரியத்தில் தேவனுடைய மனதை பிலேயாம் அறிந்தான். ஆனால் அவன் பண ஆசை உள்ளவனாயிருந்து எப்படியாவது அந்த அநீதியான சன்மானத்தை அடைய வேண்டும் என்று விரும்பினான். போவதா, வேண்டாமா என்று இரண்டாம் தடவை கர்த்தரிடம் விசாரித்த போது, போவதற்காக அனுமதியை பெற்றுக்கொண்டான்.

இந்த பிரயாணத்தில் பிலேயாம் அவனது கழுதையால் கண்டிக்கப்பட்டான். ஒரு குறுகலான இடத்தில், வழியில் தேவனுடைய தூதன் நின்றான். கழுதை தூதரைப் பார்த்து போகாமல் நின்றது. பிலேயாமின் கண்கள் திறக்கப்படாதிருந்ததால் அவன் தூதனை பார்க்கவில்லை. கழுதை அடிக்கப்பட்டு, போக மறுத்தது. இந்த அற்புதம் கூட பிலேயாமின் பண ஆசையை தடுக்கவில்லை. அவன் செல்வத்தை விரும்பினான். அதை அடைய தம்முடைய சக்தியால் எதையும் செய்வான். சும்மா அங்கு நிறுத்தப்பட்டான்.

பிலேயாம் மோவாபின் ராஜாவாகிய பாலாக்கினால் மிகவும் மரியாதையுடன் வரவேற்கப்பட்டான். பலியீடங்களைக் கட்டி தேவனுக்கு பலிகளை செலுத்தும்படி பிலேயாம் பாலாக்கிடம் கூறினான். தெய்வீக சித்தத்தை முன்னரே அறிந்த அவன் அதற்கு விரோதமாகவும் விருப்பங் கொண்டாலும் ஒரு வகையான தெய்வ பக்தியை அவன் பெற்றிருந்தான். பலிகள் கொடுக்கப்பட்டன. அவன் தீர்க்கதரிசனம் சொல்ல ஆரம்பித்தான். ராஜா அது சாபமாக இருக்கும் என்று நம்பியிருந்தான், ஆனால் அது உண்மையிலேயே ஆசீர்வாதமாக இருந்தது. வார்த்தைகள் தேவனால் ஏவப்பட்டு வந்தன. பரிசுத்த பேதுரு எழுதுகிறதாவது: "தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள்." (2 பேதுரு 1:21) சாபத்திற்கு பதிலாக ஒரு ஆசீர்வாதம் வந்ததாக ராஜா குறை கூறினான். தேவன் சொல்லுகிற வார்த்தையைத் தவிர நான் வேறு எதையும் கூற சக்தியற்றவன் என்று முன்னரே சொல்லவில்லையா என்று ஆட்சேபம் கூறினான்.

ஏமாற்றம் அடைந்த ராஜா, இஸ்ரயேலருக்கு பயந்து, வேறு ஏதாவது வழியில் அவர்கள் சபிக்கும்படும்படி பார்த்தான். அவன் தீர்க்கதரிசியை வேறு ஒரு இடத்திற்கு அழைத்துச் சென்று அங்கேயிருந்து இஸ்ரயேல் சேனைகளை சபிக்கும்படி முயற்சித்தான். மறுபடியும் பலி பீடங்கள் கட்டப்பட்டன. பலிகள் கொடுக்கப்பட்டன. ஆனால் அவன் எதிர்பார்த்த சாபம் ஆசீர்வாதத்திற்கு பதிலாக வரவில்லை. அவன் நம்பிக்கை இழந்து கோபமடைந்தான். அந்த சேனைகளின் ஒரு பகுதியாவது சபிக்கப்பட வேண்டும் என்று வேறு ஒரு இடத்திற்கு தீர்க்கத்தரிசியை அழைத்துச் சென்றான். மூன்றாவது தடவையாக இங்கேயும் ஆசீர்வாதம் வந்தேயொழிய சாபம் வரவில்லை.

### இரு மனமுள்ள மனிதன்

நாம் இதுவரையில் பார்த்த வகையில் பிலேயாம் இருமனமுள்ளவன் என்பதை அபரிமிதமாக

வெளிப்படுத்தினான். அவன் கர்த்தருடைய தீர்க்கதரிசியாக இருந்துஅவருடைய வார்த்தைகளை அவரது நாமத்தில் பேச விரும்பினான். ஆனால் அவனோடு கூட செல்வமும் கனமும் வரவேண்டும் என்று விரும்பினான். அவனுக்கு எது உயர்ந்தது என்று தேவகிருபை காணாததை அவன் விரும்பினான். நல்லது மற்றும் கெட்டது,தேவனுடைய வழி மற்றும் செல்வத்தின் வழி அவனுக்கு முன்னே இருந்தன. முழு இருதயத்தோடு எதை அதன் தேர்ந்தெடுப்பான்? அவன் எந்த ஒன்றையும் தேர்ந்தெடுக்கவில்லை. அவன் இரண்டையும் பெற முயற்சித்தான். அவன் தேவனுடைய கருவியாகவும் ஒரு ஊழியக்காரனாகவும் இருக்கவும் மற்றும் எதிர்மாறான மார்க்கத்தின் பரிசை பெறவும் விரும்பினான்.

ஐயோ பாவம், எவ்வளவு பேர் ஒவ்வொரு யுகத்திலும் பிலேயாமின் ஆவியை உடையவர்களாக இருந்திருப்பார்கள்! இயேசு இந்த ஆவிக்கு விரோதமாக எச்சரித்து கூறியதாவது: "தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது." ஆண்டவருடைய வார்த்தைகள் உண்மை என்பதை எவ்வளவு பேர் கண்டிருக்கிறார்கள்! தன்னுடைய இருதயத்திலே அக்கிரமத்தை நினைக்கிறவர்களையும், அவருக்கு ஊழியம் செய்ய விரும்பாமல், அதன் பரிசுகளை மாத்திரம் நேசிக்கிறவர்களையும் கர்த்தர் தம்முடைய ஆலோசனையிலிருந்தும் ஐக்கியத்திலிருந்தும் விலக்குவார் என்பதை எவ்வளவு பேர் கண்டிக்கிறார்கள். தேவன் உள்ளிந்திரியங்களை, இருதயத்தை ஆராய்ந்து பார்க்கிறார் என்பதை நாம் நினைவுகூருவோமாக. இயேசுவை பற்றி எழுதியிருப்பதை நாம் நினைவுகூருவோம்: "நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுக்கிறீர்; ஆதலால் தேவனே, உம்முடைய தேவன் உமதுதோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்." (சங்கீதம் 45:7)

நமது இரட்சகருடன் தேவனுடைய பரிவர்த்தனைகளில் அவருடைய நீதியான அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அவரை எடுத்துக்காட்டாக வைத்திருக்கிறார். இரு மனமுள்ளவன் எல்லா வழிகளிலும் நம்ப முடியாதவன். அவன் தேவனுக்கு பிரியமானவனோ, ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவனோ அல்ல.

## பொக்கிஷத்துடன் இருதயம்

ஆண்டவர் கூறினது: "உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்." தங்களுடைய இருதயத்தை பூமிக்குரியவைகளில் பிரதானமாக வைப்பவர்கள் தங்களோடு வருகிற கண்ணிகளை தவிர்க்க கஷ்டப்படுவார்கள். இருதயத்தில் உண்மையாக இருக்க வேண்டும் என்பதே பிலேயாமின் பாதுகாப்பான மார்க்கமாக இருந்தது. இந்த காரியத்தில் தேவனுடைய சிந்தையை அறிந்து, அவன் அதில் சந்தோஷப்பட்டிருக்க வேண்டும். எதிர் திசையில் வந்த எந்த பிரஸ்தாபத்தையும் முழுமையாக நிராகரித்திருக்க வேண்டும். பாலாக் ராஜாவின் இரண்டாவது கோரிக்கையை கொண்டு வந்த பிரபுக்களிடம் அன்புடனும் ஆனால் உறுதியுடனும், தேவனுடைய சித்தமே தீர்க்கதரிசி பிலேயாமுக்கு பிரமாணம் என்றும் தேவனுடைய சித்தத்திற்கு மாறாக எதையும் ஒரு கனம் கூட யோசனை பண்ணக்கூடாது என்றும், தேவனுடைய சித்தத்திற்கு விரோதாக தூண்டுகிற பணம், செல்வம் மற்றும் நன்மதிப்பு போன்றவைகள் அவமதிப்பாக இருக்கும் என்றும் சொல்லியிருக்க வேண்டும். நமது வாழ்க்கையில் நாம் ஒவ்வொருவரும் இந்த பாடத்தை அப்பியாசப்படுத்துவோமாக. நமது இருதயம், வார்த்தை மற்றும் கிரியைகளில் தேவனே முதலாவதாக இருப்பாராக,

பிலேயாம், தீய வெகுமதியை பெற்றுக்கொள்ளும் நம்பிக்கையுடன் ஒரு பிரயாணத்தை தவறாக எடுத்திருந்தால் கூட, அவன் கழுதையின் சம்பவத்தின் மூலம் தூண்டப்பட்டிருக்க வேண்டும். சர்வ வல்லவருக்கு எதிராக போக முயற்சி செய்வதற்கு மேலாக கழுதை கூட அறிந்திருக்கிறது.அந்த மிருகத்திற்கு மேலான பகுத்தறிவையும் மானிட தைரியத்தையும் வெளியரங்கமாக பயன்படுத்தியிருந்தால் பெரும் அனுகூலமாக இருந்திருக்கும்.

பிலேயாமின் இருதயம் தவறாக இருந்ததை நாம் பார்க்கிறோம். இன்னும் அவன் தீர்க்கதரிசியாக இருக்க விரும்பினான். ஆனால் ஒரு பரிசுத்தமான தீர்க்கதரிசியாக இருப்பதை நிறுத்திவிட்டு, செல்வம், அநீதியான வெகுமானத்தினால் ஒவ்வொரு நிமிடமும் அசைக்கப்பட்டான். ஐயோ பாவம், எப்படி அவனது மனம், பண ஆசையினால் தரம் தாழ்ந்து, ஒழுக்கம் கெட்டுப்போனது! அவன் வெளிப்புறமாக தேவனுக்கு விசுவாசமாக இருந்து, தவறாக சொல்லாமல் இருந்தும், உள்ளுக்குள் தேவனுடனான நல்லிணக்கம் போய்விட்டது. பண ஆசை என்கிற ஒரு வெறும் கறை, தொற்றாக மனிதனின் அனைத்து உயர்ந்த மற்றும் உண்மைத்தன்மையை விழுங்கும் அளவுக்கு வேகமாக பரவியது. அவனது இருதயத்தில் ஆரம்பித்த அழுகிப்போதல் அல்லது நோய், அழகான ஆப்பிள் பழத்தின் மையபாகம் வரை செல்வது போல, அவனது வெளிப்புறத்தைத் தவிர எல்லாவற்றிலும் பரவியது.

தேவனுடைய மனிதனாக ஏற்றுக்கொள்ளப்பட்டவன், பாலாக் வாக்களித்த செல்வத்தின் மீதான ஆசை என்னும் பாவ சேற்றில் ஊர்ந்துக்கொண்டிருந்தான். இஸ்ரயேல் ஜனங்களை சபிப்பதற்கு தான் அனுமதிக்கப்படாததற்கான காரணத்தை அவன் ராஜாவிடம் விளக்கிக் கூறினான். அவர்கள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அவர்கள் அவருடைய அர்ப்பணம் பண்ணப்பட்ட ஜனங்கள், அவர்கள் அவருடன் உடன்படிக்கை உறவுக்குள் இருப்பவர்கள். அவர்கள் அவருடைய பிரமாணங்களை கைக்கொள்ள நாடுகிறார்கள். அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருக்கும்படி அவர்களை பண்ணுதல் மூலமே அவர்களின் மேல் சாபத்தை கொண்டுவர முடியும் என்றான்.

பிலேயாம் மூலம் வழிகாட்டப்பட்டபடி, பாலாக் ராஜா மீதியானியர்கள் தலைவர்களிடம் பேசி, அவர்களது ஸ்தீரிகளை இஸ்ரயேலரோடு வேசித்தனம் பண்ணவும் அதன்மூலம் மீதியானியர்களின் மத வழிபாட்டை இஸ்ரயேலர்கள் கடைபிடிக்கும்படியும் தூண்டினான். இஸ்ரயேலர்களை பாவத்திலும் விக்கிரக ஆராதனையிலும் சிக்க வைப்பதின் அளவுக்குத்தக்கதாக இஸ்ரயேலரின் பிரமாணத்தின் சாபம் அவர்கள் மேல் விழும். அறிவானது தவறாக பயன்படுத்தப்படும் போது அது எப்படிப்பட்ட ஆபத்தானதாக இருக்கிறது, இது எவ்வளவு சோகத்திற்குரியது, ஆனால் எவ்வளவு உண்மையாயிருக்கிறது! தேவனைப் பற்றி கொஞ்சம் அறிவுள்ளவர்களை சாத்தானுடைய வெற்றிகரமான கருவிகளாக யாராலும் ஆக்க முடியாது என்பது இன்றைக்கு எவ்வளவு உண்மையாக இருக்கிறது!

## தேவன் இந்த பாடத்தை அனுமதிக்கிறார்

இன்றைய நாட்களில் தேவன் தீய செயல்களையும் தீய திட்டங்களையும் தடுப்பதின் மூலம் சகல தீய

சூழ்ச்சிகளையும் அவரால் தடுத்திருக்க முடியும். காரியங்கள் அதனதன் வழியில் நடக்கும்படியும் அப்பொழுதும், இப்பொழுதும் இடை இடையேயும் ஒரு பெரிய பாடத்தை கற்பிக்கப்படும்படியும் அனுமதித்தார். அந்த திட்டம் வெற்றிகரமாக இருந்தது. சில மீதியானிய ஸ்தீரிகளும் குமாரத்திகளும் சில இஸ்ரயேல் மனிதர்களை கவர்ந்து வேசித்தனம், விக்கிரக ஆராதனை மற்றும் களியாட்டங்கள் செய்யும்படி செய்தனர். தேவன் அவர்களுடன் சீனாய், ஏபால் மற்றும் கெர்சீம் மலையில் செய்த உடன்படிக்கையின்படி, உடனே இஸ்ரயேலரிடையே வாதை ஆரம்பித்தது.

இஸ்ரயேலர் தேவனுக்கும் அவரது பிரமாணங்களுக்கும் உண்மையாக இருக்கும் போது அவர்களது எதிரிகள் ஜெயங்கொள்ளமாட்டார்கள் என்பது இஸ்ரயேலர்களுடனான தேவனுடைய உடன்படிக்கையாக இருந்தது. அவர்கள் அவருடைய ஜனங்களாக இருக்க வேண்டும். அனைத்து உலக காரியங்களில் அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். அவர்கள் அவரது பிரமாணங்களை உதாசீனப்படுத்தி விக்கிரக ஆராதனையில் ஈடுபட்டால், பல்வேறு வாதைகளை அவர்கள் மேல் கொண்டு வருவார். இந்த காரியங்கள் அவர்களது தவறுகளுக்கு தண்டிப்பதற்காக மாத்திரமல்ல, ஒரு பாடமாக இருக்கவும், ஒரு எச்சரிக்கையாக இருக்கவும், புறஜாதிகளிடத்தில் பொதுவாக இருக்கக்கூடிய இப்படிப்பட்டவைகளை செய்யாமல் தடுக்கவும் ஆகும்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஆயிரக்கணக்கான இஸ்ரயேலர்களின் மரணம் அவர்களது பாவத்திற்கான முழு தண்டனையாக இருந்தது. அவர்கள் நித்திய வேதனையில் விடப்படாமல் வெறும் நித்திரைக்குச் சென்று உண்மையான மோசேயாகிய மேசியாவின் நல்ல நாளுக்காக காத்திருக்கிறார்கள். அப்பொழுது மரண நித்திரையிலிருந்து எழுந்து, தாங்கள் முன்பு நிழலான முறையில் அனுபவித்தோம் என்ற முழுமையான மற்றும் தெளிவான அறிவுக்குள் கொண்டுவரப்படுவார்கள்.

தேவன் இஸ்ரயேலர்களை அவர்களது நியாயப்பிரமாண நிபந்தனைகளின்படி மாத்திரம் தண்டிக்காமல், மீதியானியர்களையும் பிலேயாமையும் தண்டித்தார். தெய்வீக வழிநடத்துதலின்படி மோசே ஒவ்வொரு கோத்திரத்திலிருந்து ஆயிரம் ஆயுதம் தரித்த மனிதர்களை அழைத்தார். இந்த சேனை தீர்க்கதரிசி பிலேயாமையும் மீதியானியர்களையும் ஒருஜாதியாக முற்றிலுமாக அழித்துப்போட்டது. பிலேயாம் வெகுமதி பெறுவதற்காக பாவகரமான ஆலோசனை கூறி, அந்த அக்கிரம வேலையை வெளியரங்கமாக மேற்பார்வை செய்தான்.

நமது மகிமையடைந்த இரட்சகர் சபைக்கு கொடுத்த கடைசி செய்தியில், அவரது சீஷர்களில் சிலர் பூமிக்குரிய அனுகூலத்திற்காக பிலேயாமை பின்பற்றி சகோதரர்களுக்கு வழியில் தடுக்கலின் கல்லை வைப்பார்கள் என்று முன்னுரைத்தார். மாம்சீக இஸ்ரயேலரை தடுமாறச் செய்த விபச்சாரம், தவறான ஆராதனை போன்றவை இந்த யுகத்தில் உச்சக்கட்டத்தில் உண்மையாக இருக்கும் என்பது அறிவிப்பாக இருக்கிறது.

### பிலேயாமின் ஆச்சரியமான தீர்க்க தரிசனம்

பிலேயாமின் தீர்க்கதரிசனங்களில் அநேக வாக்கியங்கள் அதன் நிறைவேறுதலில் மிகவும் மனதில் பதியத்தக்கதாக இருக்கின்றன. உதாரணத்திற்கு:

"கன்மலையுச்சியிலிருந்து நான் அவனைக் கண்டு
குன்றுகளிலிருந்து அவனைப் பார்க்கிறேன்;
அந்த ஜனங்கள் ஜாதிகளோடே கலவாமல்
தனியே வாசமாயிருப்பார்கள்."

"உங்களை ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன்,
உங்களை சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன்."

"அவரை தரிசிப்பேன், சமீபமாய் அல்ல;
ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும்,
ஒரு செங்கோல் இஸ்ரயேலிலிருந்து எழும்பும்
யாக்கோபிலிருந்து தோன்றும் ஒருவர் ஆளுகை
செய்வார்."

இஸ்ரயேலர்கள் மற்ற ஜாதிகளுடன் கலவாமல் தனியே வாசமாயிருப்பார்கள் என்கிற அறிக்கை நிறைவேறுகிறதை நிச்சயமாக நாம் பார்க்கிறோம். அந்த காலத்தில் வேறு எந்த ஜாதி தனது தனித்தன்மையை காத்து வாழ்ந்தது?

அவர்களை சபித்த அல்லது காயப்படுத்தியவர்களின் அறிக்கை எவ்வளவு உண்மை. இஸ்ரயேல் தங்களை தாங்களே காயத்தை வருவித்துக்கொண்டார்கள். நாம் உலக முழுவதும் பார்க்கும் போது இஸ்ரயேலுடன் கடுமையாக நடந்துகொண்ட தேசம் கடுமையாக தண்டிக்கப்பட்டதை நாம் காண்கிறோம். மாறாக, யூதர்களை ஆசீர்வதித்திருக்கிற மகா பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் மாபெரும் ஆசீர்வாதங்களை பெற்றிருக்கிறார்கள்.

மேசியாவின் ராஜ்யத்தைக் குறித்து சொல்லப்பட்டவைகளும் உண்மையாக இருக்கிறது. மாம்ச பிரகாரமாக யாக்கோபின் வம்சத்தில் வந்தவர் பூமியின் ஆளுகையை பெறவேண்டியவராயிருக்கிறார். அவர் பிரகாசமான விடிவெள்ளி நட்சத்திரத்தை போல ஒரு மகிமையான சூரிய உதயமாக முன் செல்லுகிறார். மேசியாவின் நாளின் உதயம் பூமியின் இரவை சிதறப்பண்ணி சாபத்திற்கு பதிலாக ஆசீர்வாதங்களை கொண்டுவரும்.

---

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ. C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

வெளியிடுபவர் :
சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை
எண். 22, முதல் தெரு,ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை-600 019.
கைபேசி : 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com
Website : www.thestudiesinthescriptures.com
**FOR PRIVATE CIRCULATION ONLY**